முஸோலினியின் ஆதிக்கம்பெருத்த இதாலிக்கு சாம்ராஜ்ய தாகம் திரும்பவும் ஏற்படவே மேற்கண்ட தீவுகளைத் துருக்கியிடம் கொடுத்துவிட மனம் வரவில்லை; இதாலியர்கள் வாணம் வெட்டி அங்கேயே ஸ்தாபிதம் செய்துகொண்டார்கள். டோடெகானிஸின் கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அசையமாட்டோமென்றார்கள். வடபாகத்திலுள்ள லெராஸ் என்ற தீவைக் கோட்டையாக்கினார்கள்; பால்கன் நாட்டார்களுக்குள் முடிச்சுப்போட ஆரம்பித்து மனஸ்தாபங்களைக் கிளப்பிவிட்டார்கள். சக்தியற்ற சிறுநாடாகிய அல்பேனியா யுகோஸ்லாவியா, கிரீஸுக்கு விரோதமாக இதாலியர் ரக்ஷகத்தை நாடியதாகப் பெயர்பண்ணப்பட்டது; எப்போதும் தோற்கும் குருவியான பல்கேரியாவுக்கும் யுகோஸ்லாவியா, கிரீஸ், ருமேனியாவுக்கும் பல பழைய விவகாரங்கள் இருந்தன; ஒரு காலத்தில் தங்கள்வசமிருந்த 'கார்பு' என்ற தீவை இழந்தபோதிலும் பால்கன் என்ற தீப் பிடித்தவீட்டில் பிடுங்கினவரை லாபமென்று இதாலியர் பார்த்தார்கள். கார்பு பிடித்ததற்கு அவர்கள் சொன்ன கொண்டிக்கூறு திருப்திகரமில்லாதபடியால் சர்வ தேச சங்கம் தீர்மானப்படி அவர்கள் அதை இழக்கவேண்டியதாயிற்று. ஆயினும், இதாலி சளைக்கவில்லை; நாளுக்குநாள் இதாலியின் சாம்ராஜ்ய ஆசை துலங்கவே, கிரீஸும் துருக்கியும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள்; முதலில் (1930-ல்) ஒருவரையொருவர் எதிர்ப்பதில்லையென்றும், பின்னால் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்கிறதென்றும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இதையடுத்து துருக்கி, கிரீஸ், ருமேனியா, யுகோஸ்லாவியா உடன்படிக்கை செய்துகொண்டார்கள்; இது 1934-ல் இன்னும் பலப்படுத்தப்பட்டது. இதை ருஷியாவும், பிரான்ஸும் ஆதரித்தார்கள்; ஏனென்றால், பால்கன் நாடுகளில் சாசுவதமான அமைதியேற்படும் என்ற நம்பிக்கை போய்விட்டது; பீட்டர் அரசனும், பிரெஞ்சு மந்திரி லூயி பார்தோவும் மார்செயில்ஸில் கொலையுண்டது இந்த அவநம்பிக்கைக்கு முதற்காரணம்; அபிஸீனியப் படையெடுப்பு கடைசி காரணம். இதாலியரைக் கண்டிக்கவேணுமென்று பேச்சுவந்தபொழுது துருக்கி, கிரீஸ், யூகோஸ்லாவியா நிலைத்துநின்றார்கள்; ஆயினும் விந்தையென்னவென்றால், பிரிடனும் பிரான்ஸும் மழமழப்பாக நடந்துகொண்டன; எதிர்ப்புக்குத் தயாராகவிருந்த பால்கன் நாடுகளுக்கு அதிலிருந்து தாது விழுந்துவிட்டது. இதைக்கண்டு ஜெர்மனிக்கும் பல்கேரியாவுக்கும் உள்ளுக்குள் அளவற்ற சந்தோஷம்.

இதாலியின் நோக்கங்கள் வெட்டவெளிச்சமாகத் தெரிகின்றன; துருக்கியின் எல்லைப்புரம்வரை தன் செல்வாக்குப் போகவேணுமென்பது அதன் நோக்கம்;

ஜெர்மனியின் துணையிருப்பதால் நெஞ்சழுத்தமிருக்கிறது. இதாலியர் அல்பேனியாவைப் பிடித்துக்கொண்டதற்குக் காரணமுண்டு; ஸலோனிகாவிற்குப் போவதில் தடைசெய்யாமலிருக்க, கிரீஸையும் யூகோஸ்லாவியாவையும் பயங்காட்ட அப்படிப் பிடித்துக்கொண்டார்கள். கிரீஸ் பயப்படவில்லை: ஆனால், தனிமையில் இதாலியர் எதிர்ப்பை நிர்வகிக்கமுடியாதென்று கிரேக்கருக்குத் தெரியும். பிரிடனைக் கேட்டார்கள்; பிரிடனும் இதாலி விரோதகாரியங்கள் செய்தால் கிரேக்கருக்கு உதவிபுரிவதாக வாக்குக்கொடுத்தார்கள். துருக்கியும் அப்படியே, அதாவது, ஸலோனிகாவைப் பாதுகாக்க திரேஸ் வழியாக பட்டாளம் அனுப்புவதாகச் சொன்னார்கள்; மேற்கொண்டு பிரிடனும் துருக்கியும் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். கிரேக்கருக்கு பிரிடன் 1939ஞு ஏப்ரல்மீ வாக்குக் கொடுத்தார்கள்; அதற்குச் சிலதினங்களுக்குமுன் முஸ்ஸோலினி கிரேக்க தளகர்த்தரான மெடாக்ஸாஸிற்கு வாக்களித்தார். அதாவது, இதாலியர் படையெடுப்பார்கள் என்ற வதந்தியெல்லாம் ஆதாரமற்றவையென்றும், கிரீஸின் நாடுகளை இதாலியர் ஒருக்காலும் அவமதிக்கமாட்டார்களென்றும், வேணுமானால் தங்கள் நல்லெண்ணத்தைக் கிரியாம்சையில் காட்டத் தயாராயிருப்பதாகவும் வாக்களித்தார். கிரியாம்சையில் காட்டிவிட்டார்......எப்படி! 3 மணி நோட்டீஸ் கொடுத்து கிரீஸ் தேசத்தைப் படையெடுத்தார்!

கிரீஸில் இப்போது நடக்கும் சண்டைக்கு முந்திய நடவடிக்கைகளை மேலே ஸ்தூலமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பால் வெகு காரியங்கள் நடந்துவிட்டது. பிரிடன் படையெடுப்பு பலிக்காமல்போகவே, வேறு இடங்களில் போர் நடத்தவேண்டுமென்று ஜெர்மானியர் தீர்மானித்தார்கள். மத்திய-கிழ்ப் பிரதேசம்தான் சண்டைக்கேற்றவிடமென்று ஏற்பட்டது. வழக்கப்போல் ஆரம்பித்தார்கள். பால்கனில் பிடித்துக்கொண்டதைக் கட்டிப்படுத்திக்கொண்டார்கள்; கிரீஸிற்கு ஜெர்மனி கொடுக்கவேண்டிய கடனைத் தீர்க்க கிரீஸ் நாணயத்தின் பொருமதியை அபாண்டமாகக் குறைக்கச்சொன்னார்கள்; ஜெர்மன்-இதாலிய விமானங்களுக்குப் பிரத்தியேக சாதனங்கள் கேட்டார்கள்; இதாலிய பட்டாள கோஷ்டி ஒன்று அனுப்புவதாகவும் அதை கிரேக்கர் வரவேற்கவேணுமென்றும் சொன்னார்கள். அதற்கு கிரேக்கர், அந்தக் கதை நடக்காது என்று பதிலளித்தார்கள். இதாலி உடனே படையெடுத்தது. ஆனால், காரியங்கள் தலைகிழாய் நடந்தது. கிரேக்கரிடம் இதாலியர் ஒருநாளும் மறக்கமுடியாதவிதமாகச் சரியான உதை வாங்கினார்கள், பிரிடிஷ் கப்பற்படை, இதாலிய துறைமுகமான டாரண்டோவைத் தாக்கி அங்குள்ள இதாலியக் கப்பற்படையை நாசமாக்கி படுத்தாத பாடு படுத்திவிட்டது. கிரேக்கர்களும் அவர்கள் மூதாதையார் தெர்மாபிலியில் சண்டைபோட்டவிதமாகப் போர்புரிகிறார்கள்; மாரதனிலும், ப்ளாடீயாவிலும் கிரீஸை முன்காலத்தில் காத்தவிதமே இப்போதும் அதன் எல்லைப்புரத்தைக் காக்கிறார்கள். அல்பேனியா எல்லைப்புரத்திலும் பிண்டஸ் மலைச்சாரல்களிலும் இதாலியரைத் துரத்தியடிக்கிறார்கள். ராக்ஷஸனை சிறுபிள்ளை வெல்லுவது இதற்குமுன் கதைகளிலும் உண்மையிலும் நடந்திருக்கிறது; அதைப் போலவே இப்போதும் நடைபெறுமென்பதில் சந்தேகமில்லை.

குறிகள் நன்ருயிருக்கின்றன. யோக்கியர்களும், பிறர் சொத்திற்காசைப் படாதவர்களுமான கிரேக்கர்கள், இதாலியரைப் பொடிபண்ணிவிடுவார்கள். ஆனால் ஜெர்மனியின் உதவி இதாலியருக்குக் கிடைத்து, அதனால் கிரேக்கர்கள் தலைக்குமேல் போய்விட்டால், மோசம் போய்விடாது. முக்குளித்துக் கிளம்பி விடுவார்கள். சமீபத்தில் சென்னையிலிருக்கும் ஒரு கிரேக்க சீமாட்டி, ரேடியோ மூலம் தேசாபிமான உணர்ச்சி நிரம்பிய ஒரு பிரசங்கத்தில் சொன்னபடி, “ஒரு சமயம் கீழே தள்ளி பொசுக்கப்பட்டாலும், சாம்பலிலிருந்தே புத்துயிருண்டாகி மறுபடியும் தழைத்துக் கிளம்பி முன்னிலைக்குவரும் சக்தியுள்ள ‘பிநிக்ஸ்’ என்ற ஜந்து அவர்கள் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அடியோடு அக்கிரமமாக அடக்கியாள்வது என்பது அசாத்தியம் அமுங்கினாலும் சுயேச்சையென்ற பலத்தால் புத்துயிர்வருமென்ற உணர்ச்சி பலமாகவுடைய கிரேக்கர் தலைதூக்கி நிற்பார்களென்பதற்கு இதுவே அத்தாட்சி.

வார யுத்தச் செய்திகள்.

(15—11—40 லிருந்து 22—11—40 வரை).

கடலில் ஏற்பட்ட வெற்றிகள்.

டாரன்டோ.—பிரதம மந்திரி சொல்லியபடி இந்த வாரத்தில் டாரன்டோவில் நடந்த சம்பவம் நல்ல செய்தியாகும். பிரிடிஷ் சண்டைக்கப்பல்களான ஈகிளும் இல்லஸ்டிரியஸும், இருளில், மறைந்துகொண்டு திங்கட்கிழமை (நவம்பர் 11, 12) இரவில் டாரன்டோ குடாக்கடலுக்குள் நுழைந்து டாரன்டோ துறைமுகத்தில் பிரிடிஷ் கப்பற்படைக்குப் பயந்து பதுங்கிக்கிடந்த இதாலிய-யுத்தக்கப்பல்களை, விமானங்களைக்கொண்டு தாக்கின. கப்பல்களுடைய பாய்மரம் வரையிலிறங்கி, 50-100 அடிக்குள் வந்து கப்பல்களின் பக்கங்களைப் பார்த்து டார்பிடோக்களைப் பாய்ச்சின. பிறகு துறைமுகத்தைப் படம் பிடித்துப் பார்த்ததில், லிட்டோரியா வகுப்பைச்சேர்ந்த இதாலிய யுத்தக்கப்பல் ஒன்று முன் அணியும், முன் தட்டும் நீரில் அமிழ்ந்து வலது பக்கமாய்ச் சாய்ந்து கிடந்தது; காவூர் வகுப்பைச்சேர்ந்த மற்றொரு கப்பல் பின்பக்கமாய்ச் சாய்ந்து மணலில் சொருகிக்கொண்டது; காவூர் வகுப்பைப்பைச்சேர்ந்த மற்றொரு கப்பல் அதிகப் பழுதாய் விட்டது; மேலும், இரண்டு குரூஸர் கப்பல்கள் வலது பக்கம் சாய்ந்துகிடக்கின்றன; அதோடு இரண்டு துணைக்கப்பல்களும் பின் பக்கம் நீரில் சாய்ந்துகிடக்கின்றன. லிட்டோரியா வகுப்பில் இரண்டும், காவூர் வகுப்பில் 4-ம் இதாலிக்கு ஏற்கனவேயுண்டு. இவைகளில் இப்பொழுது பாதி சேதமாய்ப்போய் இப்பொழுது 3 கப்பல்கள் தான் சண்டைக்கு லாயக்காயிருக்கின்றன. இந்தப் பெரிய வெற்றியை முன்னொரு சமயம் அபூகிர்விரிகுடாவிலேற்பட்ட வெற்றிக்கு ஒப்பிடுகிறார்கள். இதிலிருந்து சில மாதங்களுக்கு முன் பிரெஞ்சுக்கப்பல்கள் பிரிந்துவிட்டதால் பிரிடனுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஈடாய்விட்டது. இதிலிருந்து மற்ற தேசங்களும் பாதிக்கப்படும். நியூயார்க் ஹெரல்ட் டிரிப்யூன் இதைப்பற்றிப் பின் வருமாறு வர்ணிக்கிறது :—

"டாரன்டோ துறைமுகத்தில் வெடித்த குண்டுகளின் முழக்கம் மத்தியதரைக் கடலெங்கும் அட்லாண்டிக்கிலும் கேட்டிருக்கும்; வெகுதூரத்திலுள்ள டோகியோவிலும் (ஜப்பான்), கேட்டிருக்கும்; பால்கன் தலைநகரங்களில் ஒலித்திருக்கும். கிரெம்லினு (ரஷியா)-க்குள்ளும் கூடப் பிரவேசித்திருக்கும், ஹிட்லருடைய அலங்கார மாளிகையிலும் கேட்டிருக்கும். டாரன்டோ வெற்றியானது, தைர்யத்திலும், சாக்ஷியிலும், சேதம் விளைவித்ததிலும், வெகு சிறப்பான வெற்றி. துருக்கியிலும், பால்கனிலும், இதிலிருந்து பிரிடிஷாருக்குள்ள மதிப்பு ஏறும். பிராங்கோவும் எதிரியோடு சேர இனித்தயங்குவார். இதிலிருந்து சுதந்திர பிரெஞ்சுக்கக்ஷி சைன்யங்களுக்கு ஆபிரிக்காவில் பலம் அதிகப்படும்.

ஜார்விஸ்-பே.—ஜார்விஸ்-பே என்ற பிரிடிஷ் கப்பல் இந்த வாரத்தில் மற்றொரு வீரச்செய்கையைச் செய்தது. இது ஒரு பீரங்கியேற்றிய வியாபாரக் கப்பல். இது நவம்பர் 5-ல் 38 வியாபாரக்கப்பல்களைக் கூட்டிக்கொண்டு

அட்லாண்டிக்கில் போய்க்கொண்டிருந்தபோது, ஜெர்மன் சிறு (பாக்கட்) சண்டைக் கப்பலொன்று (ட்யூட்ஸிலாண்டோ, அல்லது அட்மிரல் ஷீரோவோ) தாக்கியது. எதிர்த்த ஜெர்மன் கப்பலுக்குப் பீரங்கி பலமதிகம். புகையைப்போட்டு, அதன் மறைவில், கூட வந்த கப்பல்களை ஓடிவிடும்படி ஏற்பாடு செய்துவிட்டுத் தோல்வி யென்பது நிச்சயமாயிருந்தும், கப்பல் தலைவனுடைய கையொன்றும், ஒடிந்து போன பிறகும், எதிரியை அணுகி, சண்டை செய்துகொண்டே, தீப்பிடித்து ஜார்விஸ் பே முழுகிவிட்டது. அதோடு வந்த கப்பல்களில் நான்குதான் சேதம். இந்த வீரச்செய்கை பிரிடிஷ் வழக்கத்துக்கு ஒத்து இருந்தது.

டாம்பிகோ.—இதே வாரத்தில், பிரிடிஷ் வீரத்தன்மைக்கெதிரிடையாக ஜெர்மன் கோழைத்தனம் வெளியாகக்கூடிய சம்பவமொன்று கடலில் ஏற்பட்டது. இதிலிருந்து பிரிடிஷ் கடற்படையைக்கண்டு ஜெர்மானியர் நடுங்குவதும் வெளி யாகிறது. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து பிரிடனுக்குப் பயந்து, நாலு ஜெர்மன் வியாபாரக் கப்பல்கள் டாம்பிகோ துறைமுகத்தில் தங்கிவிட்டன. சென்ற வெள்ளிக்கிழமை இரவு அருகாமையில் வந்த ஜெர்மன் நீர்மூழ்கியொன்றைச் சந்திக்கவோ, அல்லது எதற்காகவோ துறைமுகத்தை விட்டு வெளிவந்தன. ஒரு பிரிடிஷ் குரூஸர் எதிர்த்ததும் பிரிகியாவென்ற கப்பல் நெருப்பு வைத்துக் கொண்டு தற்கொலை செய்துகொண்டது. மற்ற மூன்று கப்பல்களும் துறை முகத்துக்குள் திரும்பிப் போய்விட்டன. பிரிகியாவின் தலைவர் இரண்டு முறை தற்கொலை செய்துகொள்ள முயன்றார். மற்றொரு செய்திப்படி, பிரிடிஷ் கப்பல் களே அங்கு வரவில்லையென்றும், ஏதோ அமெரிக்கக் கப்பல்கள் பேசிக்கொண்ட தைக் கேட்டு பயந்து விட்டதாகவும் தெரிகிறது.

மொகடேஷு.—இதாலிய-ஸோமாலிலாண்டின் தலை நகராகவும், துறை முகமாகவுமிருக்கிற மொகடேஷுவை சிறு பிரிடிஷ் சண்டைக் கப்பல்கள் தாக்கின.

கிரீஸ்.—ஜெர்மனி, இதாலிய துருப்புகளை வெல்ல முடியாதென்ற கால மெல்லாம் போச்சு. அலெக்ஸாண்டரைப்போல் கீர்த்தி பெற நினைத்த முஸோ லினியின் சைன்யங்கள் ஓட்டம் பிடிக்கின்றன. ஒரு பெரிய தந்திரத்தைச்செய்து கிரேக்க சேனாபதியான மெடாக்ஸாஸ் எதிரியை விரட்ட ஆரம்பித்து விட்டார். வட பார்சத்தில் கிரேக்கர்கள் அரீஸாவைப் பிடித்துக்கொண்டு, 3000 அடிக்கு மேற் பட்ட இடங்களில் ஐவான் மலையில் சண்டைசெய்து வெற்றியடைந்து விட்டார் கள். ஸலோனிகாவுக்கு கேந்திரஸ்தானமான கோரிட்ஸா புதன்கிழமை (நவம் பர் 18) இரவு ஒரு மணிக்குப் பிடிபட்டதாக பல்கேரிய எல்லையிலிருந்து செய்தி வந்திருக்கிறது. பிரிடிஷ் ஒலிபரப்பின்படி, கோரிட்ஸாவைச் சுற்றி கிரேக்கர் கள் வளைத்துக் கொண்டிருக்கிறார்களென்றும் ஆனால் இன்னும் பிடிப்பது பாக்கியா யிருக்கிறதென்றும் தெரிகிறது. தென் (எபைரஸ்) பார்சத்தில், மழையிலும், கலா மாஸ் நதியின் சேற்றிலும் கஷ்டப்பட்டுக்கொண்டு இதாலியர்கள் ஓடுகிறார்கள். நடு பாகத்தில்—அதாவது பிண்டஸ்-பொந்தில் 4,000, 5,000 இதாலியர்கள், ஆயுதங் களைப் போட்டுவிட்டு, கிழிந்த உடுப்போடு, உணவின்றி ஓடும்படியாய் விட்டது,

பசிதாங்க முடியாமல் இவர்களில் சிலர் கிரேக்கர்களை உணவுக்குக் கெஞ்ச, கிரேக்கர்கள் அவர்கள் பீரங்கிகளை எடுத்துக்கொண்டு, பதிலாக, மகரோணி என்ற தின்பண்டத்தை இரட்டையளவு சேர்த்துக் கொடுத்தார்கள். பாவம், இவர்கள் மூன்று வாரங்களுக்குள், எளிதில் வெற்றி அடையலாமென்று நம்பி, ஆதன்ஸ் தலை நகரில் ஜய ஊர்வலம் வரும்போது வாசிப்பதற்காக மாண்டலின், சிதார் முதலிய சங்கீத வாத்தியங்களை எடுத்துச் சென்றார்கள்.

இந்த வாரத்தில், தளவாட ஸப்ளை ஸ்தலங்களாகிய வலோனு, ரோஸோ துறைமுகங்களையும், இதாலிய சைன்யங்களை வெளியேற்றும் பாரி, பிரிண்டிஸி துறைமுகங்களையும் பிரிடிஷ் விமானங்கள் தாக்கின.

கிரீஸை எதிர்ப்பதற்காக ஜெர்மன் துருப்புகள் பல்கேரியாவில் நிறுத்தப் பட்டிருப்பதாகப் பிரஸ்தாபம். கிரீஸில் வசிக்கும் 8000 ஜெர்மானியர்களும் ஜெர்மனிக்குத்திரும்ப ஏற்பாடுகள் நடக்கின்றன.

முஸோலினியின் பிரஸங்கம்.—அபீஸீனிய யுத்தத்தில் ஸர்வதேசசங்கம் இதாலிக்கு விரோதமாக சில உத்தரவுகளைப் போட்டது. இதனுல் இதாலிக்கு ஏற்பட்ட கோபத்தை ஞாபகப்படுத்திக்கொள்ள 5 வருஷங்களாக கொண்டாட்ட மொன்று நடந்து வருகிறது. இந்த வருஷக் கொண்டாட்டத்தில் நவம்பர் 18-ம் தேதியன்று முஸோலினி பிரஸங்கம் செய்தார். இவர் பேச்சில் அகம்பாவமும், பயமும், பொய்யும் கலந்து நின்றன. இதாலிக்குச் சமீபத்தில், நிலச்சண்டையிலும், கடற்சண்டையிலும் ஏற்பட்ட அவமானங்களைச் சாக்குப்போக்குச் சொல்லி மறைப்பதாயுமிருந்தது. ஜனங்கள் இழந்து வரும் தைர்யத்தைக்கிளப்பி விடவும், கலைந்து வரும் தன்னுடைய பாஸிஸ்ட் கக்ஷியைப்பலப்படுத்தவும் பேசிய பேச்சென்று இதை வைத்துக்கொள்ளவேண்டும். பாக்கி சொன்ன தெல்லாம் வெறும் பேச்சு. இதாலிய ஒலிபரப்புகள், உண்மையைக்காட்டும் நிலைக் கண்ணுடியென்ருர். இப்படிச் சொல்லிச்செய்த பிரஸங்கத்திலேயே அநேக பொய்களிருக்கின்றன. அவையாவன :—

போய். 1.—ஒவ்வொரு ஒலிபரப்பையும் நானே எழுதுகிறேன்.

போய் 2.—இந்த வருஷம் மே மாதத்திலேயே கப்பல் நிலயங்களை, கிரீஸ் பிரிடனுக்குக் கொடுத்து விட்டது.

போய் 3.—கிரீஸ் யுத்தத்தில் இதாலிய 'ஆல்பைன்' சைன்யம் அழிய வில்லை.

போய் 4.—எபைரஸ் சண்டையில் 371 இதாலியர்கள்தான் மடிந்தார்கள், காயப்பட்டது 1000-ம் தான்; காணுமற்போனது 750 பேர்கள் (உண்மையில் நஷ்டமதிகம்.)

போய் 5.—இதாலியக் கப்பல்கள் நன்ருய்ப்பாதுகாப்பதால் பிரிடிஷ் கப்பல் கள் எவ்வித இடைஞ்சலும் செய்ய முடியவில்லை. (டாடிகானீஸ் தீவுகளுக்குப் போக்கு வரவு நின்று போயிற்று.)

ராஜீய சஞ்சாரங்கள்.—இந்த வாரத்தில் மந்திரிகள்—அதிலும் விசேஷமாக, இதாலிய, ஜெர்மன் அயல் நாட்டு மந்திரிகளான சியானோவும், ரிபன்டிராப்பும் ஐரோப்பியத் தலைநகரங்களுக்கு ஓடித்திரிவது வெகு விநோதமாயிருக்கிறது. ருமேனிய பிரதம மந்திரி இதாலிக்கோடினார். போரிஸ் அரசர் ஹிட்லரை ரகஸ்யமாய்ப் பார்க்க வந்தார். ஸீனர் ஸுனர் எம். லவாலே பாரிஸில் சந்தித்து விட்டு, பெர்காபுக்கு ஓடினார். எம்-மோலடோவ் ஜெர்மனிக்கு வந்து விருந்துக் கச்சேரிகள் நடந்தன. ஆனால் பிரிடிஷ் விமானங்கள் வந்து விருந்தைக் கெடுத்தன. சாப்பிட வந்தவர்கள் மோலடோவ் மாளிகையில் இரவெல்லாம் தங்க நேரிட்டது. ஹிட்லரும் எம். மோலடோவும் கூடிப்பேசிய பேச்சு எதற்கென்று இன்னும் தெரியவில்லை. டாரன்டோ, காலபாட் வெற்றிகளிலிருந்தும், கிரேக்கர் முன்னேற்றத்திலிருந்தும், பிரிடிஷ் விமானிகள் படுத்தும் பாட்டிலிருந்தும் ஜெர்மன் கக்ஷி இறங்கியிருக்கவேண்டும். ஜெர்மன் வேண்டுகோள் ஐந்து விதங்களாகயிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. 1. ராஜீயப் பொருளாதாரக் காரியங்களில் ரஷியாவின் உதவி. 2. மூவரசு ஒப்பந்தத்தில் ரஷியாவைச்சேர்ப்பது. 3. ரஷிய—ஜப்பானிய நட்பைப் பலப்படுத்துவது 4. ரஷிய கைத்தொழில்களை ஜெர்மனிக்கு உபயோகப்படும்படி செய்வது. (பிரிடிஷ் முற்றுகை ஜெர்மானியரின் மென்னியைப் பிடிக்கிறது. மாட்டு—இறைச்சிக்குச் சமானமாக நாய்—இறைச்சியை ஜெர்மானியர் சாப்பிடப்போகிறார்களாம்.) 5. துருக்கி, கிரீஸுக்கு உதவி செய்யாதபடி பின்னின்றுகொண்டு ரஷியா துருக்கியைப் பயமுறுத்துவது.

விமானப்போர்.—வடக்கே ஸ்டாவென்ஜரி(நார்வே)-லிருந்து தெற்கே லோரியன்ட் (பிரிட்டானி) வரையில் பிரிடிஷ் விமானங்கள் எதிரியை எதிர்த்து வருகின்றன. பிரிடிஷ் கைத்தொழில் சாலைகளைவிட 50-பங்கு அதிகமாக ஜெர்மன் தொழில் சாலைகள் சேதமாய்விட்டன.

வியாழக்கிழமையன்று ஜெர்மானியர்கள் மூரட்டுத்தனமாய் கவென்ட்ரி நகரத்தைத் தாக்கியதில் 1000-பேர்கள்போல சேதப்பட்டு, பல கட்டடங்களும் இடிந்தன. 'மூன்று கோபுர நகரம்' என்று கவென்ட்ரிக்குப் பெயர். அதற்குக் காரணம், காதீடிரல், ஹோலி டிரினிடி, க்ரைஸ்ட்சர்ச் என்ற மூன்று கோவில்களுடைய மூன்று கோபுரங்களேயாகும். இவைகளில் இரண்டு கோபுரங்கள் சேதமாயின. ஸென்ட்லூயி கிளோப் டெமோக்ராட் பத்திரிகை சொல்லுவது போல, 'கவென்ட்ரி நகரம் தீப்பட்டு எரிந்து சாம்பலாய்ப் போகிறது. ஹிட்லர் ஜெயித்தால் உலகத்தில் அரசாக்ஷி கவென்ட்ரியைப்போல்தானிருக்கும்.

சமீபமாய் ஏற்பட்ட ஜெர்மன் எதிர்ப்புகளால் பல முக்கியமான கட்டடங்கள் பழுதாய்விட்டன. அவையாவன:—பக்கிங்ஹாம் அரண்மனை லாயம் (அரண்மனை 4 தடவை எதிர்க்கப்பட்டிருக்கிறது); ட்ரூரி-லேன் அரண்மனை நாடகசாலை (இது வெகு புராதனமானது, இன்னும் நாடகங்களிங்கு போடப்படுகின்றன), வெஸ்ட் மின்ஸ்டர் ஹால், ஸென்ட் பால் கோவில், கான்டர்பரி கோவில், லிவர்பூல் கோவில். ஹிட்லர் தன்னால் முடிந்தவரையில் பயப்படுத்தித்தான் பார்க்கிறார். ஆனால்

அதற்குச் சரியான பதில் கவென்ட்ரியில் பழக்கடைக்காரன் ஒருவன் கொடுத்திருக்கிறான். குண்டுகள் விழுந்த அதிர்ச்சியால் அவன் கடையிலிருந்த சரக்குகள் சேதமாயினும் அஞ்சாது "வழக்கம்போல் வியாபாரம் நடக்கும். ஹிட்லர் வந்தால் அவருக்கும் கொட்டைகள் விற்கப்படுமென்றும்" நோட்டீஸ் தயாரித்துக் கடைவாசலில் தொங்கவிட்டான்.

பிரான்ஸ்.—கூட்டுறவிலிருந்து வந்த முதற் பயனாக ஹிட்லர் 60,000, 12,000 பிரெஞ்சு பேசும் ஜனங்களை லோரேனிலிருந்து விரட்டிவிட்டார். பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மன் தொழிற் சாலைகளைத் தாக்குவதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்ய பிரான்ஸில் உற்பத்தியாகும் சாமான்களை ஜெர்மனியால் கேட்கப்படுகிறது. எடுத்துக்கொள்ளப்படாத பிரெஞ்சு தேசத்திலுள்ள துறைமுகங்களிலும் எல்லைகளிலும் ஜெர்மனியின் அதிகாரம் செல்லவேண்டுமென்கிறது. பாரிஸ்—மார்ஸேல்ஸ் ரஸ்தாவானது ஜெர்மன் ஆதிக்கத்திலிருந்து இந்த வழியாய் ஜெர்மனி மத்தியதரைக்கடலுக்குச் செல்லவும், துருப்புகளும், சாமான்களும் இதாலிக்கு அனுப்பவும் வேண்டுமாம். இதற்குப் பதிலாக பிடேன் அரசாங்கம் பாரிஸுக்கு மாற்றப்படுமாம்.

லயன்ஸ் சேம்பர்-அப்-காமர்ஸுக்குச் செய்த பிரஸங்கத்தில் மார்ஷல் பிடேன் இனி பிரான்ஸில் ஏற்படுத்தப்போகும் சர்வாதிகார அரசியலைப்பற்றிப் பேசினார். ஒவ்வொன்றுக்கும் ஒரு மேலதிகாரி நியமிக்கப்பட்டு பிரான்ஸானது, ஏறக்குறைய 20 மாகாணங்களாக பொருள் ஆதார நிலைமைப்படி பிரிக்கப்பட்டு பிரபுக்களும், ஜனப்பிரதிநிதிகளும், தொழில் பிரதிநிதிகளும் அடங்கிய ஜில்லா சபைகள் அவருக்கு யோசனை சொல்லும்.

எம். டிலாடியர், ஜெனரல் காமலின், எம். லியான்ப்ளம், விசாரணையை எதிர்பார்த்து, புரஸாட் ஜெயிலுக்கனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அதே ஜெயிலில் எம். லாசேம்புர் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறார்.

அமெரிக்கா.—அமெரிக்காவுக்கு பிரிடன் குத்தகைக்கு விட்டிருக்கும் பாகங்களில் ராணுவ நிலயங்கள் வைக்குமிடங்கள் அமெரிக்காவும் பிரிடனும் கூடிப் பேசி நிர்ணயிக்கப்பட்டாய் விட்டன. பிரெஞ்சு குடியேற்ற நாடாகிய மார்டினிக்குக்கு அருகாமையிலுள்ள ஸ்டாலூஸியாவில் முதல் நிலயமேற்படும்.

யுனைடட் ஸ்டேட்ஸ் தொழிற்சாலைகளில் கொஞ்சகாலமாக வெடிவிபத்துகள் நேர்ந்துகொண்டிருக்கின்றன. இம்மாதிரியான மூன்றாவது விபத்து பிரிட்ஜ் வில்லேயில் கெமிகல், ஸயனைட் ரஸாயன சாலையில் ஏற்பட்டது. இம்மாதிரி அமெரிக்காவுக்கு விரோதமான செயல்களைக் கண்டு பிடித்து ஆராய்ச்சி செய்ய ஏற்படுத்தியிருக்கும் கமிட்டியின் தலைவரான மிஸ்டர் மார்டி டைஸ் என்பவர் சீக்கிரத்தில் தஸ்தாவேஜு ஒன்றைப் பிரசுரிக்கப்போகிறார். இதில் ஜெர்மனி, இதாலி, ஜப்பான், ரஷியா, செய்திருக்கும் சூழ்ச்சிகளுக்கு ருஜுக்களிருக்கின்றன. இந்த தஸ்தாவேஜு வெளிவந்தால், அமெரிக்கா ஏஜண்டுகளை ஜெர்மன் நாடுகளிலிருந்து ஹிட்லர் வெளிப்படுத்தப்போவதாகப் பயமுறுத்துகிறார்.

ஸ்பெயின்.—கர்னல் யூஸ்டே என்ற ஸ்பானிஷ் ஸேனாதிபதி டான்ஜியர் என்ற பொதுஸ்தலத்தில் சம்பந்தமுள்ள அரசாங்கங்களைக் கேழ்க்காது நிர்வாகம் செய்ய ஆரம்பித்து விட்டார். கேட்டதற்கு தான் நடுநிலை வகிக்கப்போவதாகச் சொல்லுகிறார். தன் பூகோள அமைப்புக்கும் தேச சரித்திரத்துக்கும் சரியான காரியத்தைச் செய்திருப்பதாக ஸ்பெயின் சொல்லுகிறது.

புது அச்சியல் இயக்கத்தில் ஜெர்மனிக்குக் கீழ் ஸ்பெயின் சேர சம்மதிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ருமேனியாவில் பூகம்பம் மறுபடியும் நவம்பர் 13-ல் இருமுறை ஏற்பட்டது. காம்பினா எண்ணெய்ச் சுத்திசாலைகளும், பைகுவி, பஸ்டினியிலுள்ள எண்ணெய்க் கிட்டங்கிகளும், பிளோயஸிக்கும், கிர்கியூ, கான்ஸ்டன்ஸாவுக்கும் போட்டிருக்கும் குழாய் (எண்ணெய்)களும் பழுதுபட்டு ஜெர்மன் எஞ்ஜினியர்கள் பழுது பார்க்க வந்திருக்கிறார்கள்.

தூரக்கீழ் பிரதேசம்.—வருஷத்துக்கு 1,800,000 டன்களுக்கு அதிகமாக எண்ணெய் ஜப்பானுக்குக் கொடுக்க நெதர்லண்ட்ஸ் எண்ணெய்க் கம்பெனிகள் சம்மதித்து விட்டன.

தாய்லாண்ட் துருப்புகள் இன்டோ-சைனா எல்லைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தன் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளப்போவதாக இன்டோ-சைனாவிலிருக்கும் பிரெஞ்சு கவர்ன்மெண்டு சொல்லிக்கொள்ளுகிறது.

யாம்சோவுக்கு வடக்கேயுள்ள பிங்கிலோசியோ முழுவதும் சீனர்கள் பிடித்து விட்டார்கள். ஆஸ்திரேலியாவுக்குப் பக்கத்துக் கடலில் கடல் வெடிகளைப் போட்டது ஒரு ஜெர்மன் கப்பலென்று தெரிகிறது. ஜிப்ரால்டர் ஜலசந்தி 10 மைல் அகலமும், 300 பாதம் ஆழமும் உள்ளது. இங்கே ஆழத்தில் கடல்-வெடிகள் வைக்கமுடியாது. இதாலிய நீர்மூழ்கிகள் ஆழத்தில் மூழ்கி ஜிப்ரால்டரைக் கடந்து போகப்பார்ப்பதாக, சொல்லப்படுகிறது.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
11—11—40 (திங்கட்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—ஸப்மரைன் (Submarine) நிலயம்.—லோரியண்ட் (Lorient).	......	பலத்த சேதம்.
	விமான நிலயங்கள்—ப்ரஸ்ட் (Brest) ஸெயிண்ட் ப்ரியாக் (Saint Briac), ஸெயிண்ட் மாலோ (Saint Malo).	நஷ்டமில்லை.	
	இரவில்.—காலநிலை சரியாயில்லாததால் இன்று விமானப்படையெடுப்பில்லை.		

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
11—11—40.	(திங்கட்கிழமை)—தொடர்ச்சி.		
	இதாலி (Italy).		
	கடற்படை நிலயம்.—டராண்டோ (Taranto).	......	3 பெரிய யுத்தக்கப்பல்கள், 2 குரூயிஸர்கள், இன்னும் சில சிறிய யுத்தக்கப்பல்கள் சேதம்.
	அல்பேனியா (Albania).		
	கப்பல்கள் நிறுத்துமிடம்.— வலோனு (Valona).	......	வெடிமருந்துக்கிடங்கு தீக்கிரையாகியது.
	எண்ணெய்க் கிடங்குகள்.— ரோஸோ (Durazzo).	......	தீப்பிடித்தன.
	சாமான் சேகரித்துவைத்திருக்கும் இடங்கள்.-ஸாரண்டா (Saranda), கோனிஸ்பால் (Konispol).	......	முக்கியமான துறைமுகம் பாழாகியது.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	டொப்ருக் (Tobruk) ...	......	பெரிய தீ கிளம்பியது.
	தரையிலிருக்கும் விமானங்கள்,—பெர்க்கா (Berka).	......	2 விமானங்கள் நஷ்டம்.
	விமான நிலயம்.—பென்காஸி (Benghazi).	......	கட்டடங்கள் சேதமாயின.
	மாய்அடாகா (Maiadaga), கூரா (Gura), ஸுலா (Zula), கெரேன், (Keren), மஸாவா (Massava)—எல்லாம் இதாலிய கிழக்கு ஆபிரிக்காவில்	நஷ்டமில்லை.	எல்லா இடங்களிலும் அதிக நஷ்டம்.
12—11—40.	(செவ்வாய்க்கிழமை).		
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	இரவில்.—எண்ணெய் ஆலைகள்—கெல்ஸின்கர்ச்சன் (Gelsenkirchen) கோலோன் (Cologne).	......	தீப்பிடித்தன.
	முக்கியமான ரயில்வே ஸ்டேஷன்கள், ஆலைகள்.—ரூர் (Ruhr), கொலோன் (Cologne).	......	சீர்குலைக்கப்பட்டன.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
12—11—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.			
	ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.		
	உள்நாட்டுத் துறைமுகம்.— டேயிபர்க் (Duisburg).	......	......
	ஸப்மரைன் (Submarine) நிலயம்.— லோரியண்ட் (Lorient).	......	பலமாகத் தாக்கப்பட்டது.
	கப்பல் நிற்குமிடங்கள்.—ப்ளஷிங் (Flushing), டன்கர்க் (Dunkirk).	......	சேதமாயின.
	பல விரோதி விமான நிலயங்கள்.	1 விமானம்.	
	இதாலி (Italy).		
	பொலோஞ (Bologna), கடற்படை நிலயம் —டாராண்டோ (Taranto), எண்ணைய் சுத்தி செய்யுமிடம்.— பாரி (Bari).	......	தீப்பிடித்தது.
	அல்பேனியா (Albania).		
	கடற்படை, விமான நிலயங்கள்.-டூராஸோ (Durazzo).	......	சிதறடிக்கப்பட்டன.
	விமான நிலயம்.—வலோஞ (Valona) ...	......	......
	ஒரு பெரிய கப்பல்.—வலோஞ (Valona) வுக்கருகில்.	......	மூழ்கடிக்கப்பட்டது.
13—11—40 (புதன்கிழமை).			
	ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	இரவில்.— ஸ்லீஸிஷர் (Schlesischer) ரயில்வே ஸ்டேஷன், கிரண்டிவால்டு (Grundewald)	......	பல இடங்கள் தீப்பிடித்தன. அதிகச் சேதம்.
	சாமான் கிடங்குகள், இன்னும் மற்ற ராணுவ முக்கியத்வமான இடங்கள்.—பெர்லின் (Berlin).	......	......
	மின்சார உற்பத்திச்சாலை—கோலோன் (Cologne).	......	சேதமாயிற்று.
	உள்நாட்டு துறைமுகங்கள்.— டேயிபர்க் (Duisburg), ரூரார்ட் (Ruhrort)	......	......

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
13—11—40.	(புதன்கிழமை)—தொடர்ச்சி.		

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

தொழிற்சாலைகள்.—டார்ட்மண்ட் (Dortmund), டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).	......	தீப்பிடித்தன.
பெரிய கரி அடுப்புகள்.—லிண்ட்போர்ட் (Lintfort).	......	......
எண்ணெய் ஆலைகள்.—கெல்ஸன்கர்ச்சன் (Gelsenkirchen), ஹானோவர் (Hanover), லூனா (Leuna).	......	தீயும், வெடிச்சத்தமும் கிளம்பின.
விமான நிலயங்கள்.—ஹாம்ஸ்டீட் (Hamstede), க்யூஸ்பரக் (Keusbruck), வடக்கு பெர்லின் (Berlin), லூபெக் (Lubeck).	......	சேதமாயின.
கடல் விமான நிலயம்.—நார்டர்னி (Norderney).	......	நாசமாயிற்று.
கப்பல் நிற்கு மிடங்கள்.—கலே (Calais), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven).	2 விமானங்கள்.	......

இதாலி (Italy).

துறைமுகங்கள்.—டாரண்டோ (Taranto).	நஷ்டமில்லை.	7 பெரிய தீகள் கிளம்பின.

அல்பேனியா (Albania).

இதாலிய விமானங்கள் (தரையில்).—கோரிட்ஸா (Koritza).	நஷ்டமில்லை.	பல விமானங்கள் சேதம்.
ரோஸோ (Durazzo), வலோனா (Valona), ஆர்கைரோ காஸ்ட்ரோ (Argyrokastro).		2 விமானங்கள்.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

சைன்யங்கள் வசிக்குமிடங்கள்.—டெர்னா (Derna).	......	......
கப்பல்கள்.—பென்காஸி (Benghazi), ஸிடி பரானி (Sidi Barrani), பார்டியா (Bardia).	......	பலத்தசேதம்.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
14—11—40 (வியாழக்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	ஸ்லிஸிஷர் (Schlesischer), ரயில்வே ஸ்டேஷன், சாமான் கிடங்குகள், புலிட்ஸ்ட்ரால் (Pulitzstarsse), லேர் டர் (Leherter), ஸ்டேஷன்களிலுள்ள சாமான் கிட்டங்கிகள், ஊரின் மத்தியில் இருக்கும் அன்ஹால்டர் (Anhalter), ரயில்வே ஸ்டேஷன்.—பெர்லின் (Berlin).	......	போக்குவரத்து சாதனங்கள் தடை பட்டன. எங்கும் ஒரே அமர்க்களம். பெர்லின் அவம்சம் செய்யப்பட்டது.
	ரயில்வே ஸ்டேஷன் சாமான் கிடங்குகள்.—ஸ்டெட்டியர் (Stettier).	......	......
	மின்சார உற்பத்திச்சாலைகள்.—வில்மர்ஸ்டார்ப் (Wilmersdorf), சார்லட்டன்பர்க் (Charlottenburg).	......	பலமாகத்தாக்கப் பட்டன.
	எண்ணெய் சுத்திசெய்யுமிடம்—வில்ஹெல்ம்ஸ்பர்க் (Welhelmsburg).	......	தீப்பிடித்தது.
	விமான உற்பத்திச்சாலை.—ப்ரமன் (Bremen).	......	சேதமாயிற்று.
	26 விமான நிலயங்கள்.—ரோஸன்டேல் (Rosendael), வானீஸ் ம்யூகான் (Vannes Meucon), ஸெயிண்ட் லெஜர் (St. Leger), ஸ்டவாங்கர் (Stavanger), உள்பட.	......	சில விமானங்கள் சேதமாயின. ஒரு வெடிமருந்து ஆலை வெடித்தது.
	வெடிமருந்துகள் ஏற்றிச்செல்லும் ஒரு ரயில் வண்டி.—லஹார் (Lehavre).	....	தகர்க்கப்பட்டு வெடித்தது.
	துறைமுகங்கள், கப்பல்கள்.—நார்வே (Norway),யில் ஸ்டவாங்கரிலிருந்து (Stavanger), பிரிட்டனி (Brittany),யில் லோரியண்ட் (Lorient), வரை.	......	......
	அல்பேனியா (Albania).		
	துருப்புகள்.—அல்பேனியா (Albanian), எல்லை,	2 விமானங்கள்.	3 விமானங்கள்.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
14—11—40. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.			
	அல்பேனியா (**Albania**)—தொடர்ச்சி.		
	விரோதி சைன்யங்கள், மோட்டார் வண்டிகள்.—கோரிட்ஸா (Koritza).	......	சில கட்டடங்கள் இடிந்தன.
	ஒரு பாலம்.—ஒக்ரிடா (Okrida), ஏரிக்கு 4 மைல்கள் தெற்கே.	......	......
	துறைமுகம்.—வலோனு (Valona).	......	1 சிறிய கப்பல் மூழ்கியது.
	இதாலிய ஆபிரிக்கா (**Africa**).		
	விரோதி சைன்யங்கள்.—தும்மார் (Tummar).	......	......
	யுத்தக் கப்பல்.—டொப்ருக் (Tobruk).	......	சேதமாயிற்று.
	சடல் விமான நிலயம்.—பாட் (Bot).	......	ஒரு கட்டடம் இடிந்தது.
	ரயில்வே ஸ்டேஷன்.—கெரன் (Keren), அகோர்தத் (Agordat),		
	சினிலி (Chinele) விமான நிலயம், மற்றும் பல இடங்கள்.—டிரிடாவா (Diredawa).	......	35 மைல்களுக்கப்பால் தீதெரிந்தது.
15—11—40. (வெள்ளிக்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	ரயில் பாதைகள், கப்பல் கட்டுமிடங்கள், கப்பல் நிற்குமிடங்கள், ஜனங்களுக்கு மிகவும் அவச்யமான சில அனுகூலங்கள்.—ஹாம்பர்க் (Hamburg).	......	கட்டடங்கள், கப்பல் கட்டுமிடங்கள், எண்ணெய் சுத்தி செய்யும் ஆலைகள் எல்லாம் நாசமாயின.
	அல்டோனு (Altona) ஜில்லாவில் ஒரு மின்சார உற்பத்திச்சாலை, ப்ராம்பெக்கி (Brambeck)ல் ஒரு காஸ் (gas) தொழிற்சாலை.—ஹாம்பர்க் (Hamburg).	......	பல இடங்களில் தீப் பிடித்தது.
	கப்பல் நிற்குமிடங்கள்.—கில் (Kiel).	......	பலத்த சேதம்.
	துறைமுகங்கள்.—ஆஸ்டெண்ட் (Ostend), கலே (Calais).	2 விமானங்கள்.	......

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.

15—11—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

இதாலிய ஆபிரிக்கா (Africa).

விமான நிலயங்கள்.—ஸோலம் (Sollum), மெனஸ்டிர் (Menastir), ஸிடிஎல்பரானி (Sidi El Barani), பார்டியா (Bardia), பொம்பா (Bomba), டொப்ருக் (Tobruk).	......	தரையிலிருந்த பல விமானங்கள் பழுதாயின.
ரயில்வே ஸ்டேஷன், பலகட்டடங்கள்.—கஸாலா (Kassala).	......	சேதமாயின.
மராமத்து இலாகா.—அஸ்மாரா (Asmara), டிரிடாவா (Diredawa), அஸ்ஸாப் (Assab), லாவல்லோ (Lavello).	நஷ்டமில்லை.	......

அல்பேனியா (Albania).

விரோதி சைன்யங்கள்.—கோரிட்ஸா (Koritza)விற்கு வடகிழக்கே.	1 விமானம்.	1 விமானம்.

இதாலி (Italy).

எண்ணெய்த் தொட்டிகள்.—பிரிண்டிஸி	......	......

16—11—40. (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள், முக்யமான எண்ணெய் சுத்திசெய்யும் ஆலைகள், மின்சார உற்பத்தி ஆலைகள், தொழிற் சாலைகள்.—ஹாம்பர்க் (Hamburg).	......	எங்கும் ஒரே தீ ஜ்வாலை வெடிச் சத்தங்கள் கிளம்பின. ராணுவ முக்யமான இடங்களுக்குப் படுசேதம்.
ப்ளோம் (Blohm), வோஸ் (Voss) கப்பல் கட்டு மிடங்கள்.—ஹாம்பார்க் (Hamburg).	......	......
கப்பல் நிற்குமிடங்கள்.—ஆண்ட்வர்ப் (Antwerp), டன்கர்க் Dunkirk.	......	சேதமாயின.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
16—11—40. (சனிக்கிழமை)—தொடர்ச்சி.			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.		
	எண்ணெய் சுத்தி செய்யும் ஆலைகள்.—	......	
	கொலோன் (Cologne), ப்ரமன் (Bremen), டார்ட்மண்ட் (Dortmund), எம்ஸ் (Ems) கால்வாய் விரோதி வசமிருக்கும் விமான நிலயங்கள்.	......	தீப்பிடித்தன.
	இதாலி (Italy).		
	பாரி (Bari), மானேபோலி (Monopoli).		
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	ஸோலம் (Sollum), பார்டியா (Bardia), டெர்ன (Derna), பொம்பா (Bomba), பென்காஸி (Benghazi), அஸ்மாரா (Asmara), மஸாவா (Massawa), டொப்ருக் (Tobruk), கூரா (Gura).		எங்கும் பலத்த சேதம்.
	ஜிபுடி (Jibuti), அடிஸ் அபாபா (Addis-Abbaba) ரயில்பாதை.—அடகல்லா (Adagalla)விற்குத் தெற்கு.	1 விமானம்.	போக்கு வரத்து தடைப்பட்டுவிட்டது.
	அல்பேனியா (Albania).		
	இதாலிய சாமான் கிடங்குகள்.-அல்பேனியா (Albania).	......	பலத்த சேதம்.
17—11—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	ஸ்கோல்வென் (Scholven) எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலைகள்.—கெல்ஸன்கர்ச்சனுக் (Gelsenkirchen)கருகாமையிலிருக்கும் பூயர் (Buir).	......	தீப்பிடித்தன.
	எண்ணெய் சுத்தி செய்யும் ஆலை.—கெல்ஸன்கர்ச்சன் (Gelsenkirchen)	......	தீப்பிடித்தது.
	தொழிற் சாலைகள்.—ரூர் (Ruhr)	......	பல சேதமாயின.
	போக்குவரத்து சாதனங்கள்.—மேற்கு ஜெர்மனி (Germany)		

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானம் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
17—11—40. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.		
	கடற்படை நிலயம்.—லோரியண்ட் (Lorient) விரோதி வசமிருக்கும் பல விமான நிலயங்கள்.	......	தகர்க்கப்பட்டன.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	பென்காஸி (Benghazi), ஸோலம் (Sollum), பார்டிய (Bardia), டொப்ருக் (Tobruk).	......	பலத்த சேதம்.
	ஒரு கட்டடம்.—கூரா (Gura)	......	இடிந்தது.
	ரயில் வண்டி நிற்குமிடம்.—அகோர்தத் (Agordat).	......	பெருந்தீ கிளம்பியது.
	அல்பேனியா (Albania).		
	ராணுவ தளவாட கிடங்குகள்.—எல்பாஸான் (Elbasan).	......	தீப்பிடித்தன.
	விமான நிலயம்.—ஆர்கைரோகாஸ்ட்ரோ (Argyrokastro).		
	விரோதி சைன்யங்கள்.—ஆர்கைரோகாஸ்ட்ரோ (Argyrokastro)வுக் கருகில் ஒரு ரோடு.	......	படு சேதம்.
	விமானச் சண்டை.—அல்பேனியன் (Albanian) எல்லையில்,	2 விமானங்கள்.	7 இதாலிய விமானங்கள்.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும் படையெடுப்பால் விளைந்த சேதமும்.
12—11—40. (செவ்வாய்க்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—தென் கிழக்குக் கடற்கரை	......	சேதமே இல்லை.
	சில இடங்கள்.—இங்கிலாந்து (England) (அதில் லண்டனி(London)ல் ஒரு இடம்.)	......	காயம் பட்டவர்கள் மிகச் சொற்பம்.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்;
12—11—40.	(செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.		
	பிரிடன் (Britain)—தொடர்ச்சி.		
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், மிட்லண்ட்ஸ் (Midlands), மர்ஸிஸயிட் (Merseyside).	...... 1 விமானம்.	சேதம் அதிக மில்லை. நஷ்டமில்லை.
	பிரிடிஷ் ஆப்பிரிக்கா (Africa).		
	ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம் சைன்யங்கள்.—கைரோ (Cairo) அலெக்ஸாண்டிரியா.—(Alexandria).	......	சொற்பசேதம்.
	கிரீஸ் (Greece).		
	கார்ப்பூ (Corfu), ஒரு சிறிய பட்டணம்.—தெஸ்ஸாலே (Thessaly).	......	சிலமனிதர்களுக்குக் காயம், சிலர் மாண்டனர்.
	ஒரு ஸ்மசானம்.—காய் (Cai) ஜில்லா.		
13—11—40.	(புதன்கிழமை).		
	பிரிடன் (Britain).		
	பகலில்.—இங்கிலாந்தி(England)ல் சில இடங்கள்.	......	சேதமே இல்லை.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம் கிழக்கு, தென் கிழக்கு இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள், கிழக்கு ஆங்கிலியா(Anglia)வில் ஒரு பட்டணம்.	...... 6 விமானங்கள்.	சில கட்டடங்கள் இடிந்தன, சிலருக்குக் காயம். சேதமில்லை.
	கிரீஸ் (Greece)		
	ஜனங்கள் வசிக்கும் பல பட்டணங்கள்.—கிரீஸி(Greece)ல் உள் நாட்டில்.		
14—11—40.	(வியாழக்கிழமை).		
	பிரிடன் (Britain)		
	பகலில்.—டோவர் (Dover) துறைமுகம் கெண்ட் (Kent), தென்கிழக்குக் கடற் கரையில் சில இடங்கள்.	......	கட்டடங்களுக்கு சொற்பச்சேதம். சிலருக்குக் காயம்.
	இரவில்.—லண்டன் (London)	......	......

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
14—11—40. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.			
	பிரிடன் (Britain)—தொடர்ச்சி.		
	சில பட்டணங்கள்.—மிட்லண்ட்ஸ் (Midlands)	......	......
	அங்குமிங்கும் சில இடங்கள்.—இங்கிலாந்து (England), வடக்கு வேல்ஸ் (Wales),	21 விமானங்கள்.	2 விமானங்கள்; 2 விமானிகளும் பத்திரம்.
	கவண்ட்ரி (Coventry).	......	பலத்த சேதம்; பலருக்குக் காயம்.
	கிரீஸ் (Greece)		
	ஜனங்கள் வசிக்கும் பல பட்டணங்கள்.—கிரீஸ் (Greece).	......	சில ஜனங்கள் காய மடைந்தனர்.
15—11—40. (வெள்ளிக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—லண்டன் (London) பிரதேசம் கெண்ட் (Kent) தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம் முதலிய பிரதேசங்களில் சில இடங்கள்.—	......	எல்லா விமானங்களும் துரத்தியடிக்கப்பட்டன. உயிருக்கும் சொத்துக்கும் சொற்பச் சேதம்.
	இரவில்.—லண்டன் (London) அதைச் சுற்றியுள்ள சில இடங்கள் மற்றும் இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள்.	...... 23 விமானங்கள்.	பலத்த சேதம், பலருக்குக் காயம், 2 விமானங்கள்; 2 விமானிகளும் உயிர் தப்பினர்.
	கிரீஸ் (Greece).		
	பட்டணங்களும் கிராமங்களும்.—கிரீஸி (Greece)ல் உள் நாட்டில்.	......	முக்கியமான சேதம் ஒன்றும் இல்லை. சிலருக்கே காயம்.
	பிரிடிஷ் ஆபிரிக்கா (Africa).		
	அலெக்ஸாண்டிரியா (Alexandria).	......	7 பேர்களுக்குக் காயம்.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
15—11—40.	(வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.		
	யூகோஸ்லாவியா (Yugoslavia) நடுநிலைமை நாடு.		
	மொனாஸ்டர் (Monastir)		
16—11—40	(சனிக்கிழமை).		
	பிரிடன் (Britain).		
	பகலில்.—லிவர்பூல் (Liverpool); இங்கிலாந்தி (England)ன் மேற்கு கிழக்கு வடகிழக்கு கடற்கரையில் சில பட்டணங்கள்.	......	சொற்பச் சேதம். சிலருக்குக் காயம்.
	இரண்டு இடங்கள்.—ஹெப்ரைடீஸ் (Hebrides)	......	ஒருவருக்கும் காயமே இல்லை.
	இரவில்.—லண்டன் (London), ஹோம் கவுண்டீஸ் (Home Counties), மிட்லண்ட்ஸ் (Midlands)	1 விமானம்.	...... நஷ்டமில்லை.
	கிரீஸ் (Greece).		
	பட்டணங்கள்.—கிரீஸி (Greece)ல் உள்நாட்டில்.	......	......
	பிரிடிஷ் ஆபிரிக்கா (Africa).		
	அலெக்ஸாண்டிரியா (Alexandria)	......	சொற்பச் சேதம்.
17—11—40	(ஞாயிற்றுக்கிழமை).		
	பிரிடன் (Britain)		
	பகலில்.—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம் தென்கிழக்குக் கடற்கரையில் சில இடங்கள்.	......	மிகவும் சொற்பச் சேதம்.
	இரவில்.—தெற்குக் கடற்கரை, இங்கிலாந்தி (England)ன் மற்ற பாகங்களில் சில இடங்கள்.	11 விமானங்கள்.	சில இடங்களில் தீப்பிடித்து உடனே அணைத்து விட்டார்கள். 4 விமானங்கள் 3 விமானிகள் பத்திரம்.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
17—11—40.	(ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.		
	கிரீஸ் (Greece)		
	கிரேக்க சைன்யங்கள்.—*கிரேக்க* (Greek) *அல்பேனியா* (Albania) *எல்லை.*	……	……
18—11—40.	(திங்கட்கிழமை).		
	பிரிடன் (Britain)		
	மர்ஸிஸய்ட் (Merseyside), *மிட்லண்ட்ஸில்* (Midlands) *ஒரு பிரதேசம், வடக்கு இங்கிலாந்தி* (England)*ல் அங்கு மிங் கும் சில இடங்கள்.*	……	*சில இடங்களில் தீப் பிடித்தது, ஆனால் சீக்கிரம் அணைத்து விட்டார்கள்.*
	கிரீஸ் (Greece)		
	கிரேக்க சைன்யங்கள்.—*அல்பேனியா* (Albanian) *எல்லையோரம்.*	……	……

யுத்தக் குறிப்புகள்.

கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை.

அச்சு தேசத்தார் ஏற்பாடுசெய்திருக்கும் 'குறடு' வேலை சல்லிஸாக இருக்கப்போகிறதில்லை. அவர்கள் உடைக்க எத்தனிக்கும் சரக்கு "ஸூயஸ் கால்வாய், குறட்டின் ஒரு பக்கம் தெற்கேயும், கிழக்கேயும், ஸ்பெயின் வழியாகவும் (ஒருவேளை) லிபியா, எகிப்து வழியாகவும் போக வேணும்; மற்றொருபாகம் கிழக்கேயும் தெற்கேயும் பல்கேரியா, துருக்கி, ஸிரியா, பாலஸ்தீனம் வழியாகப் போகவேணும். இப்படிச் செல்வதில் ஆறுகள், மலைகள், கடல்கள் இவைகளால் ஏற்படும் இடைஞ்சல்கள் விர, இன்னுமொரு வில்லங்கம் இருக்கிறது. ஒரு மார்க்கத்தில் சீதோஷ்ணஸ்திதி நன்றாகவிருக்கும் சமயம் மற்றொரு மார்க்கத்தில் வெகு கெடுதலாகவிருக்கும். குளிர்காலத்தில் பால்கன் நாடுகள் வழி சண்டைசெய்து செல்வதென்றால் அது ராக்ஷஸ வேலை, மனிதனாலாகும் காரியமல்ல; இப்போது முதல் மார்ச்சு மாதம்வரை குளிர் காலம். ஆனால் இந்தக் காலத்திற்குத்தான் இதாலிய தளகர்த்தர் கிரேஸியானி (Graziani) காத்திருந்திருக்கிறார்; ஏனென்றால், பெரும் போர்புரிய சுமாரான குளிர்ச்சி எகிப்து தேசத்தில் இப்போதுதான் இருக்கும். அதுதான் விஷயம். இதாலியர்கள் இச்சமயம் ஆபிரிக்காவில் முண்டினார்களானால், பால்கன் பக்கம் வேலை செய்யும் அவர்கள் சகபாடிகள் பின் தங்கிவிடுவார்கள். மார்ச்சு மாதம்வரை எதிர்ப்பை அச்சு தேசத்தார்கள் ஒதுக்கிவைக்கநேர்ந்தால், வெயில்காலம் வந்த பின் காபந்துகள் பலமாய் செய்துவைத்துக்கொண்டு, எதிர்ப்புக்குத் தயாராக விருக்கும் நேசதேசத்தார் படையைக்கண்டு முஸோலினியின் ஐரோப்பிய பட்டாளம் ரொம்பத் தயங்கும். வாயைத்திறந்து இரண்டு பக்கமும் சேர்ந்து நறுக்கவேண்டியிருக்கிற பாக்குவெட்டி வேலை நடைபெறுவது வெகுக் கஷ்டம்.

கைவரிசையா?

ரகஸியத்தை வெளியிட்டாரென்றால், ஜாக்கிறதையாகவே செய்தார்! இப்போது இதாலியை ஒரு போடுபோடவேணுமென்று சில வாரங்களுக்குமுன் அட்மிரல் சாட்பீல்டு (Admiral Chatfield) சொன்ன யோசனையைக் குறித்துப் பேசுகிறேன். அவர் சொன்ன யோசனையை ஸர்க்காரில் நிராகரித்தார்கள்; யுத்தநிலை சரிவர சொல்லப்படவில்லை; ஹிட்லர் வலையில் சிக்கிக்கொண்டு, சேனை விரயம் நாம் செய்யக்கூடாது; நமது சைன்யங்கள் அடுத்து கீழ் தேசங்களில் இருப்பதில், அவர்களுக்கு உதவியாக போகவர இருக்கவும், கடற்பக்கம் அச்சு தேசத்தார் வராமல் பாதுகாக்கவும், மத்தியதரைக்கடல் ஸ்வாதீனத்தை நாம் விடக்கூடாது; அச்சமயம் நாம் எந்த அளவிற்கு கிரீஸிற்கு உதவிபுரியமுடியும் என்று கிரேக்கருக்குத் தெரியும். இப்படியெல்லாம் இருந்தது. கூடாது, நாம் இதாலியரை எதிர்க்க நினைக்கக்கூடாது......இப்படிக்கெல்லாம் சொல்லி வந்து......கடைசியாக டாரண்டோவில் புகுந்து, இதாலிய யுத்தக்கப்பல்களில்

பாதிவரை முடமாக்கிவிட்டோம்; இது யாருக்கு ஆச்சரியத்தையுண்டுபண்ணி விட்டதோ—அட்மிரல் சாட்பீல்டுக்கா, முஸோலினிக்கா!

பெரிய ஏமாற்றம்.

என்னைமட்டும் முஸோலினி யோசனை கேட்டிருந்தால், தனது ஜெயபேரிகைகளையும் பொறுக்கியெடுத்த பெர்ஸாக்லியேரி (Bersaglieri) துருப்புகளையும், கிரேக்கரிடம் மாட்டிவிட்டு இழக்காமலிருந்திருக்கலாம்; சீமையில் அரசியல் வர்க்கத்தாரிடமும், பட்டாள வர்க்கத்தாரிடமும் நெருக்கமான ஒரு கிரேக்க சீமாட்டியுடன் நான் சில மாதங்களுக்குமுன் பேசியதிலிருந்து, கிரேக்கர் விழுந்து படுக்கமாட்டார்கள்; யுத்தம்புரிந்தே தீருவார்கள் என்று சொல்லியிருப்பேன்! அச்சமயம் நான் நம்பவில்லை; பல உதாரணங்களில் காட்டி, வினயத்துடன் என் அபிப்பிராயத்தைச் சொன்னேன். "நாங்கள் சண்டைபோடுவோம்; சந்தேகப் படாதீர்கள்; பால்கன் நாடுகளில் மற்றவர் சேராதபோனாலும் நாங்கள் சண்டை போடுவோம்" என்று அழுத்தந்திருத்தமாக அந்த அம்மாள் சொன்னாள். யுத்தம் வந்தால், அந்த அம்மாளுடைய மனோகரமான தேசத்திற்குத் தாங்க முடியாத ஆபத்து விளையுமென்று தெரிந்தும், அவள் பேசின தினுசுனாலேயே எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

அந்த அம்மாள் சொன்னது உண்மை. அவளையும், அவள் தேசத்தாரையும் நான் வணங்குகிறேன். முஸோலினியின் கூட்டாளி செய்து சாதிக்கும் வழிகள், அதாவது, முறையற்ற நிர்ப்பந்தம், பயமுறுத்தல் முதலியவைகள்செய்து ஒரு சொட்டு ரத்தம்கூட சொட்டாமல் ஜயமடையவேணுமென்று முஸோலினி நினைத்த நினைப்பெல்லாம் வீண். நடப்பில் இடிபடுகிறான்; அவனது பொருக்கியெடுத்த படையெல்லாம் எல்லைப்புறத்திலிருந்து விறட்டியடிக்கப்படுகிறார்கள்; அவன் பெயரும், இதாலியர் பெயரும் சகதியில் இழுபடுகிறது. பாக்கியிருக்கும் நடுநிலைமை வகிக்கும் தேசத்தாரும் இதென்ன விந்தையென்று மூக்கின்பேரில் விரலைவைத்து ஆச்சரியப்படுகிறார்கள்.

தற்கால லைஸாண்டர்.

கிரேக்கர் பிரெஞ்சு போர்முறையை ஆதரித்தவர்களென்றும், பிரெஞ்சு பட்டாள தூதகோஷ்டிகளின் சிஷ்யர்களென்றும் சொல்லக் கேட்டிருக்கிறேன் ஆனால், கிரீஸ் தேசத்திய ராஜீயக் காரியங்களைத் திறமையுடன் நடத்தினவரும் இப்போது யுத்தத்தைப் பராமரிஷித்து நடத்திவருபவருமான தளகர்த்தர் மெடாக்ஸாஸ், பிறநாட்டில் போர் முறையைப் படிக்காமல், ஜெர்மானிய யுத்த கலாசாலையில் படித்த சிறந்த மாணவர்களில் ஒருவர். இதை இப்போது அச்சு தேசத்தார் நினைத்தால் வெகு கசப்பாகவிருக்கும்! இந்த நூற்றுண்டின் துவக்கத்தில் நடந்த பால்கன் யுத்தம் முதற்கொண்டே மெடாக்ஸாஸ் யுத்ததந்திர நிபுணன் என்றும், ஒப்பற்ற தளகர்த்தரென்றும் ஸ்பஷ்டமாக எல்லோருக்கும் தெரியும். அரசியல் காரியங்களில் சமத்காரம் பொருந்தியவரென்ற காரணத்தால், ஜனங்களால் ஆதரிக்கப்பட்டு அரசாங்கத்தாருடன் ஒத்துழைக்க வல்லமை

யுடைய தலைவராயிருப்பதை தடுக்கவில்லை; சமாதானமே சொல்லமுடியாத விதமாக நொண்டிச் சால்ஜாப்புகள் சொல்லி, இதாலியர் கேட்ட காரியங்களைச் செய்யமுடியாதென்று ராங்கியுடன் மெடாக்ஸாஸ் தூக்கியெறிந்ததிலிருந்து, அவர் அஞ்சா நெஞ்சத்தவரென்று உலகத்தாரும், முஸோலினியும் அறிந்தார்கள்.

அமானுஷ்யம்!

"அமானுஷ்யமான தைரியம்" என்று சொல்லுவது சகஜம்; ஆனால் இப்போது நடைபெறுங்காரியங்களில் காட்டப்படும் தீரமானது சாதாரண மனிதர்கூட, இவ்வளவு இக்கட்டான நிலைமையில்லாமல் பாதி அளவிற்கு இருந்தாலும் சுமாரான தைரியத்துடனாவது நடந்துகொள்ளவேணுமென்று எதிர்பார்க்கிறார்கள். போயர் யுத்தம் நடந்தபோது ஒரு பெரிய ராணுவ அதிகாரி தனது தளகர்த்தனிடம் ஒரு நெருக்கடியான சமயத்தில் சுவாதீனத்தின்பேரில் சொன்னாரும், "என்ன தளகர்த்தரே, தாங்கள் பயப்படுகிறீர்கள் என்று நான் நினைக்கவில்லை." அதற்கு தளகர்த்தர் பதில் சொன்னதாவது, "பர்டீ, எனக்கிருக்கும் பயத்தில் பாதி உனக்கிருந்தால், நீ இந்நேரம் ஓட்டமெடுத்திருப்பாய்"! இதுதான் தைரியம். சமீபத்தில் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் "ஜர்விஸ்பே" கப்பல் தலைவர் நடந்துகொண்டவிதம் தைரியம். அநேக கப்பல்களிற்கு காபந்தாய்ச் சென்றார். எதிரில் ஜெர்மன் யுத்தக்கப்பல்வந்தது. கண்ணில்பட்டதுமுதல் தலைதப்புவது தம்பிரான்புண்ணியம் என்று தெரிந்துகொண்டார். ஆனால் அவர் ஒரு நொடிப்பொழுதில் ஒரு தீர்மானம் செய்துகொண்டார். அதாவது, அந்தப் பெரிய யுத்தக்கப்பலின் கவனத்தைக் கொஞ்சநேரமாவது வேறுவழியில் திருப்பினால், அவர் பார்வையிலிருந்த கப்பல்களில் சில கப்பல்களாவது தப்பிக்க இடமுண்டு என்று நினைத்தார். ஆகையால் தன் கப்பல் பீரங்கிகள் முழக்கம் போட, அது கடலில் முழுகிப்போகும்வரை ஜெர்மன் யுத்தக்கப்பலை நேரில் சென்று தாக்கினார். அத்துடன் சண்டைபோட்டார். இதென்னடா வம்பென்று அந்த யுத்தக்கப்பல் இந்த சிறு கப்பலுடன் கவனித்துப் போராடும்படி செய்தார்....தன் கப்பல் முழுகும்வரை விடாமல் வம்பு செய்துகொண்டிருந்தார்! அவர் செய்தகாரியத்தின் பயனென்ன தெரியுமா? அவர் வசமிருந்த 38-நிராயுதபாணிகளான கப்பல்களில் 32-கப்பல்கள் தபாய்த்து தப்பிவிட்டன! என்ன வீரம்! அந்த சூரனை கப்பற்தலைவனென்னவ், அவருடன் சென்ற பிரிடிஷ்காரர்களென்ன, இவர்களுக்கு மனோபாவம் இப்படியிருக்கும் நிலைமையில் ஹிட்லர் ஜம்பம் எப்படி பலிக்கமுடியும்?

முடிவும்—ஒரு சமானமான சம்பவமும்.

கார்பு தீவிலிருந்து, இஸ்தான்புல், ஹைபா வழியாக, அலெக்ஸாண்டிரியா, ஸிடிபரானி வரை வியாபிக்கும் இப்பெரும் அமர்க்களத்தை உற்றுப்பார்த்தால், இரண்டு பெரிய விஷயங்கள் முன்னுக்கு நிற்கின்றன. பிரிடிஷ் சாம்ராஜ்யமும், அமுக்கப்பட்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளும் விடுதலையடையவேணுமானால், ஸூயஸ் கால்வாயில் இருக்கிறது சூக்ஷ்மம். இது ஒரு விஷயம்.

இரண்டாவது, இதாலி கிரீஸை சண்டைக்கிழுத்தபொழுது, ஈஜியன் கடலில் பிரிடிஷ் கப்பற்படை வியாபிக்க இடங்கொடுத்து, பெருங்கடற்சண்டைக்கு ஆஸ்பதமாகிவிட்டது. இது இதாலி ஏமார்ந்துபோய் தானுக வருவித்துக்கொண்ட வில்லங்கம்.

இதை வைத்துப்பார்ப்போம். 1805-ல் நெபோலியன் பிரிடன்பேரில் படையெடுக்கும் எண்ணத்தைக் கைவிடும்படி நேர்ந்தது; கடற்சண்டையில் பெயரும், கீர்த்தியும் வேண்டாமென்று விட்டு, ஐரோப்பாகண்டமளாவிய பெரும்போரில் முழுமனதும் செலுத்தினுன்; அல்ம், ஆஸ்டர்லிட்ஸ், ஜீனு முதலிய இடங்களில் ஜயமடைந்து, ஐரோப்பாவிற்கு அதிபதியானுன். ஆனுல் இடையில் டிரபால்கரில் கடல் யுத்தம் நடந்தது. ஆங்கில கடல் பலமும், தேச உணர்ச்சியுமாகச் சேர்ந்து, அந்தக் கொடுங்கோல் மன்னனை நெபோலியன் பலத்தை க்ஷீணிக்கச் செய்தது.

பிரிடனை படையெடுப்பதென்ற எண்ணத்தை ஹிட்லர் கைவிட்டதாகத் தெரிகிறது. பிரான்ஸ், ஸ்பெயின், பால்கன் நாடுகளில் ராஜதந்திர வேலைகள் ஆரம்பித்தான். பிரிடன் படையெடுப்பில் நேர்ந்த தோல்வியை மறைக்க ஓர் பெரிய அமர்க்களத்தில் போர்துவக்கினுன். என்ன ஏற்படுகிறது? பிரிடிஷ் கடற்பலமும், அமுக்கப்பட்ட தேசத்தாரும் சேர்ந்து இந்த ஹிட்லரின் குடலை அறுக்க ஆரம்பித்துவிட்டார்கள். நெபோலியன் வியாபாரமும், ஹிட்லர் வியாபாரமும் கிட்டத்தட்ட ஒரேமாதிரியாகவிருக்கிறதென்பது இதிலிருந்து தெரிகிறது.

அனுபந்தம் I.

(A)

இதாலியர்களை எதிர்க்க ஸூடான் தயார்.
கஸ்ஸாலாவின் யுத்த சன்னிவேச விசேஷம்.
பாலைவனப் போருக்கு ஆரம்பம்.
ஆசியா கண்டத்தின் எல்லை மதில்களின் பாதுகாப்பு.

(யார்க்ஷயர் போஸ்டு பத்திரிகையின் நிருபர் எழுதுகிருர்.)

ஸமகாலத்தில் ஸூடானையும் எகிப்தையும் தாக்குவதாக இதாலியர்கள் சூழ்ச்சி செய்தார்கள். அத்தகையான சண்டையைத் துவக்கக் கால நிலைமையும் சற்று அநுகுணமாக இருக்கலாம். இதை அறிந்த ஸூடான் கவர்னர் ஜெனாலும் இதாலியர்களை எதிர்க்க ஸூடானில் உள்ள சைன்யம் தயாராக இருப்பதாகவும் அறிவிக்கிருர்.

வெள்ளங்களும் அடங்கிக்கொண்டு வருகின்றன. அபிஸீனியா பீட பூமிகளில் இருந்து பெய்யும் மழையும் குறைந்துகொண்டுவருகிறது. நைல், அத்பாரா ஸோயாட், ப்பூபார் நதிகளில் வெள்ளமும் குறைந்துவிட்டது. ஸூடான் தேசத்தின் எல்லை உட்புறங்களில் உள்ள இதாலிய சைன்ய நிலயங்கள் சகதி, வெள்ளம் இத்தகைய சேதங்களினின்றும் நிவர்த்தியாகிவிட்டன.

ஸூடான் தேச ஜனங்களின் மனதை மட்டும் தளர அடிக்கவேண்டுமென்றால், சுமார் 1,000 மைல் நீளமுள்ள பிரதேசத்தில் பல இடங்களில் இதாலியர்கள் தாக்க முயலலாம். ஆனால் முக்கியமான பிரதேசம் கஸ்ஸாலா என்ற ஊர். இந் நகரம் அத்பாரா இலாகாவில் இருக்கிறது; இவ்விலாகாவும் முக்கோண வடிவமுள்ளது. இம் முக்கோணத்தின் சிகரத்தில் போர்ட் ஸூடான், கார்மே இருக்கின்றன. சிகப்புக் கடலிலிருந்து (Red Sea) ஸூடானுடைய மத்திய பிரதேசங்களுக்குச் செல்ல, இத் துறைமுகங்கள் துவாரா ஒரு ரயில் பாதையும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதாலிக்குச் சொந்தமான கஸ்ஸாலாவில் உள்ள சைன்யங்களுக்கு அடிப்படையான இடம் எரிட்ரியா தேசத்தில் அகோர்தத் என்ற ஊரில் இருக்கிறது. அகோர்தத்திலிருந்து கஸ்ஸாலாவுக்கு ஒரு மோட்டார் ரஸ்தாவும், கடற்கரை செல்ல மஸ்ஸாவா துறைமுகத்திற்கு ஒரு ரயில் பாதையும் உண்டு.

இதாலியர்களுடைய லக்ஷ்யமெல்லாம் இக் கார்மேதான். நெருப்புப் பொறி பறக்கும் அப் பாலைவனங்களில் மிகவும் ரம்யமானவும், பார்த்தோர் மனதை ஆகர்ஷிக்கக்கூடிய சக்தியுள்ளதுமானது இக் கார்மே நகரம். இவ்வூரில் தான், கியாதிபெற்ற ஜெனரல் கார்டன் என்பவர் 1877 முதல் 1880 வரை ராஜ்ய நிர்வாகம் நடத்தி வந்தார். 26—1—1885ல் மேற்படி கார்டன் அவர்கள் கார்மே சண்டையில் உயிர் துறந்தார். அப்பால் காலிவா ராஜ்யபாரம் செய்தார். பிறகு தான் கிட்ச்னர் பிரபு, கார்டன் விழுந்த இடத்திலேயே தன்னுடைய சைன்யங்களுடன் படையெடுத்து, ஆங்கிலேயக் கொடியை நாட்டினர். இந் நகரமும், ஸூடான் தேசத்திற்குச் சிரஸுக்குக் சமானமான பிரதேசம்போல் விளங்குகிறது. சிரஸிலிருந்து தேகமாத்யந்தம் நரம்புகள் செல்வதுபோல், கார்மேயிலிருந்து உட் பிரதேசங்களிலுள்ள, ஒவ்வொரு கிராமத்திற்கும் போக்கு வரத்து சாதனங்கள் மிகவும் நுட்பமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்தகைய நகரமான கார்மேயின் பிராபல்யத்தை இதாலியர்கள் அறிந்துதான், அதைப் பிடிப்பதே லக்ஷ்யமாகக் கொண்டிருக்கிறார்கள்.

பெடுயின் அராபியர்கள் இவர்கள் இஸ்மேயில் வம்சத்தில் பிறந்தவர்கள் என்று சரித்திரம் கூறுகிறது. இவர்களுக்கு ஆங்கிலேயர்கள் பேரிலோ மிகவும் பிரியம் உண்டு; இதாலியர்களை மனதார வெறுக்கிறார்கள். ஆரபுகளும், ந்யூபியர்களும், (எதியோபியாவுக்கு, ந்யூபியா என்ற மற்றொரு பெயர்) அவர்களுடைய தலைவர்கள் கெயிட் இலாம், ஸைமஸ் பாஷா என்ற இருவர்கள் எப்பொழுது சண்டை செய்ய வார்த்தை கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். அராபிய சைந்யங்கள் அவர்களுடைய ஸேனாபதியின்

தலைமையின்கீழ் ஒவ்வொரு ரஸ்தாவையும் கார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதாலியர்கள் அப்பிரதேசங்களில் கால் அடி வைப்பது மிகவும் சிரமசாத்தியமான காரியம்.

ஆயிரத்து நானூறு மைல்களுக்கு அப்பால் பிரமிட் பிரதேசங்களில் சண்டை துவக்கும்போல் இருக்கிறது. ஆனால் அங்கு ஜெனரல் வில்ஸன் இதாலியர்களை எதிர்க்கத் தயாராக இருக்கிறார். ஜெனரல் வில்ஸன் தலைமையில் இருக்கும் சைன்யம், மிகவும் பராக்கிரமமானது. மணற்பாங்கான பாலைவன உஷ்ணத்தின் கொடுமையைச் சற்றேனும் பாராட்டாமல் மிகவும் உத்சாகத்தோடு தயாராக இருக்கிறது. அதே பிரதேசத்தை நூற்றுக் கணக்கான வருஷங்களாக எதிர்த்துத் போரிட்டுவரும் சைனியங்களை சாக்ஷியர்க பார்த்துக்கொண்டு, பெண் நரசிங்கம் (Sphinx) சிரஞ்சீவியாக விளங்கிக்கொண்டு வருகிறது.

ஆங்கிலேய படைத்தலைவர் ட்ரூரிலோ என்பவர் தன்னுடைய குதிரைப் பட்டாளத்துடன் டெலி-யெல்-கெபிர் ஊரிலிருந்து கெய்ரோகாவுக்குச்சென்றகாலம் முதல் நைல் நதிப் பிரதேசத்திற்கு செழிப்பும், சுபிக்ஷமும் ஏற்பட்டு வந்திருக்கிறது. ஆங்கிலேயர்களுடைய முயற்சியினால் நைல் நதி பாய்ந்துவரும் நாலாயிரம் மைல் நீளமும் உஷ்ண மண் சார்ந்த பாலை வனத்திலிருந்து மிகவும் செழிப்பான பூமியாய் மாற்றப்பட்டிருக்கிறது. இப்படி ஆங்கிலேயர்கள் சுமார் அறுபது வருஷகால மாகப் பாடுபட்டுப் பயிற்சி செய்திருக்கும் பூமியை இதாலியர்கள் ஆக்கிரமிக்க, அக்கிரமம் செய்து வருகிறார்கள்.

அம்முயற்சியில் இதாலியர்கள் நிச்சயமாகத் தோல்வி அடைவார்கள். ஏனென்றால், ஆபிரிக்கா, ஆசியாகண்டத்து முஸ்லீம்கள், மலைகளிலும், பள்ளத் தாக்குகளிலும், ஆயுதபாணிகளாக, இதாலியர்களை எதிர்க்கத் தயாராக இருக் கிறார்கள். அங்குமட்டும் அல்ல, இங்கிலாந்திலும், வேல்ஸிலுள்ள பீட பூமிகளிலும் பள்ளத்தாக்குகளிலும், இருந்துவந்த சைன்யங்களுடன், முஸ்லீம்களும் உடன் நின்று சண்டைசெய்ய அவ்வண்ணமே தயாராக இருக்கிறார்கள். அவர்கள் வசம் யுத்தத்திற்கு வேண்டிய நவீன ஆயுதங்கள் இருக்கின்றன. கவசமணிந்த யுத்த வாகனங்களும் இருக்கின்றன. ஆசியா கண்டத்தின் தூரத்து எல்லைக் கோட்டை போன்ற அப்பிரதேசத்துக்கு, ஒவ்வொரு கப்பலிலும் மேன்மேலும் படைகள் வந்து 'இதைக் கடந்து எதிரிகள் யாரும் செல்லக்கூடாது' என்று எச்சரிப்பதுபோல் உஷாராய் நிற்கின்றன.

(B)

கிரீஸில் அச்சு தேசத்தார் தந்திரம். பிரிடிஷ் கப்பற் படைக்குச் சரியான குறி.

எகிப்தில் பிரிடிஷ் படைகளுக்கு பயமுறுத்தல்.

(யார்க்ஷைர் போஸ்டின் ராணுவ நிருபர் எழுதியது.)

கிழ் மத்தியதரைக்கடல் பிரதேசத்தை அச்சு தேசத்தார் வசமாக்கிக்கொண்டு எகிப்தில் இதாலிய படையெழுச்சிக்கு உதவி புரியவேணுமென்ற நோக்கம் அச்சு தேசத்தாருக்கு இருப்பதாகத் தென் கிழக்கு ஐரோப்பாவின் நிலைமையிலிருந்து தெரியவருகிறது. கிரேக்க தீவுகளையும் துறைமுகங்களையும் பிடித்துக் கொண்டு தங்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்துகொள்ள எத்தனிப்பார்கள். அப்படிப் பிடித்துக்கொண்டால் பிரிடிஷ் ராணுவப்படையை ஆபிரிக்க கடற் கரையிலிருந்து இழுத்துவிடலாமென்று நோக்கம். இவ்விதமான கேந்திர ஸ்தானங்களைப் பிடித்துக்கொள்வதென்றால் ரகஸ்யமாகச் செய்யமுடியாது; ஏனென்றால் பிரிடிஷ் கப்பல்கள் கவனித்துக்கொண்டிருக்கும். அச்சு தேசத்தாருக்கு இன்னமும் ஒரு எண்ணம் உண்டு. பிரிடிஷ் தளகர்த்தரான ஜெனரல் வேவலின் சைன்யத்தின் வலது பார்ஸ்வத்தை ஸிரியா வழியாக அடைந்து, இதாலியர்களுக்கு விரோதமாக, எகிப்தில் உபயோகப்படுத்தக்கூடிய பிரிடிஷ் சைன்யங்களை பாலஸ்தீனில் நிறுத்தி விடலாம் என்ற ஒரு நோக்கமும் உண்டு. இது நடைபெற முடியாது; ஏனெனில் ஸிரியாவுக்குச் செல்லும் கடல் மார்க்கம் நமது கையில் இருக்கிறது; மேலும் பாலஸ்தீன் கடற்கரையையும் ஜெனரல் வேவல் பட்டாளத்தின் வலது பார்ஸ்வத்தையும் பந்தோபஸ்து செய்ய ஏற்பாடு முன்னமே செய்யப்பட்டிருக்கிறது. இதாலியர்கள் கடற்கரையில் தாக்கவும் அதில் முக்கியமாக விமானங்களை உபயோகப்படுத்தவும் நினைக்கிறார்கள். கிரேக்கர்களை, மலைப்பிரதேசத்தில் எதிர்த்தால் தாமதம் ரொம்ப ஏற்படுமென்ற உணர்ச்சியால் இப்படிச்செய்கிறார்கள். கிரீஸானது இதாலியரால் நொடிப்பொழுதில் காரியம் சாதித்துக்கொள்ளக்கூடிய தேசமல்ல; ஆகையால் எப்படிப்போனால் எதிர்ப்புக் குறைவாக இருக்குமோ அந்த மார்க்கத்தில் போக இதாலியர்கள் நினைக்கிறார்கள். விமானங்களால் இதாலியர்கள் பள்ளத் தாக்குகளைத் தாக்கி ஜெர்மானியர் உதவியைக்கொண்டு பிரிடிஷ் போர்க் கப்பல்களை எதிர்க்க எத்தனிப்பார்கள். ஆகையால் நமது கப்பற்படை எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு நமது விமானப்படையும் முக்கியம்தான். இதிலிருந்து ஹிட்லர் பிரிடிஷ் விமானப்படைகளைத் தோற்கடிக்க முடியவில்லை என்ற விஷயமும் நன்றாகத் துலங்குகிறது. அதனால் தன் பெயரை மாற்றிக்கொள்ள கிழக்குப் பிரதேசத்தில் ஹிட்லர் சிலம்பம் பழக ஆரம்பிக்கிறான். இதாலியர்கள் இப்பொழுது வெகு நெருக்கடியில் கடல் மார்க்கம் செல்லவேணும். அப்படிப் போகும் காலத்தில் பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் வாயில் சுலபமாக மாட்டிக் கொள்ளுவார்கள்.

(C)

முஸோலினி கீழ் நாடுகளைப் பிடிக்கப்பார்க்கிறார்.

அச்சுக் கக்ஷிக்காரர்களின் போட்டியும், பேராசையும்.

(இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆப் இந்தியாவிலிருந்து பத்திராதிபரின் அனுமதியின்பேரில் மொழிபெயர்க்கப்பட்டது).

முஸோலினி ரோம் சர்ச்சுப்பகுதியைச் சேர்ந்த கிறிஸ்து பக்தரென்று சொல்லிக்கொள்ளுகிறார். ஆனால் திருநாட்களில்தான் அவர் இதர தேசங்களை ஆக்கிரமித்து, அக்கிரமங்களைச் செய்வது வழக்கமாய்ப்போயிற்று. கிறிஸ்துவர்களுக்கு வெகுப்பிரதானமான குட்—பிரைடே (Good Friday) என்ற வெள்ளிக்கிழமையன்று விசேஷமான புண்ணியதினத்தில், 1939ல் ஆல்பேனியாவைப் படையெடுத்தார். இந்த வருஷம் ரம்ஸான் பண்டிகை பார்த்து எகிப்தையும், அரேபியாவையும் வெடிகுண்டுகளால் எதிர்த்தார். சென்ற அக்டோபர் இறுதியில் ஒரு ஞாயிற்றுக்கிழமை பார்த்து, கிரீஸுக்கு இறுதிக்கடிதம் அனுப்பினார். இந்தக்கடிதத்தில் சில இடங்களைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டிருந்தாலும், இதுவும் யுத்தப் பிரகடனமென்றுதான் வைத்துக்கொள்ளவேண்டும்.

இம்மாதிரியாக ஐரோப்பாவிலிருக்கும் முதல் சர்வாதிகாரியான முஸோலினி, ஜனநாயக ஆக்ஷி பிறப்பிடமாகிய கிரீஸ் தேசத்தோடு சண்டைக்கு இறங்கியிருக்கிறார். கிரீஸானது ஒருகாலத்தில் குடியரசாயிருந்து 5-வருஷங்களுக்குமுன்னே ஜனசமூகத்துக்கடங்கிய மன்னர் அரசாக்ஷியைப்பெற்றது. ஆனால், அதிகாரம் விசேஷமாக மெடாக்ஸாஸ்கையில்தானிருக்கிறது. மெடாக்ஸாஸுக்கு மனோதிடம் அதிகம்.

உலக முழுவதையும் கைப்பற்ற சர்வாதிகாரிகள் யோசனைசெய்து திட்டம் போட்டிருப்பதாயும், கிரீஸ் படையெடுப்பு அதைச் சேர்ந்ததென்றும் ராஜ்ய தந்திர அறிவாளர்கள் சிலர் கருதுகிறார்கள். இவர்கள் சொல்லுகிறபடி சதியாலோசனைகள் செய்யப்பட்டிருந்தால், கிரீஸ் யுத்தம் மேற்சொன்ன திட்டத்தில் ஒரு பகுதிதான்.

ஆனால் மற்றொருகாரணத்தால் இதை மறுக்கவேண்டியிருக்கிறது. சர்வாதிகாரிகளுக்குள் யாராவது ஒருவர் தோற்றாலும், மற்றவர்களும் தோற்கவேண்டியதுதான். ஆகையால், ஒருவருக்கொருவர் உதவிசெய்வதாகப் பாசாங்காவது செய்யவேண்டும். இல்லாவிட்டால் சர்வாதிகாரமே நின்றுவிடும். இதற்காக பால்கன் பிரதேசத்தில் அகப்பட்டதைச் சுருட்டுவதற்காக கிரீஸைப் படையெடுத்திருக்கலாம்.

ஆல்பேனியாவைப் பிடித்துக்கொண்ட சமாசாரம்.

முன்பின் நடந்த காரியங்களைக் கவனித்தால் கொள்ளையடிப்பதற்காகவே இதாலி கிரீஸோடு சண்டைக்குப் போயிருக்கிறதென்று சொல்லும்படியிருக்கிறது.

1939ல் இதாலி அல்பேனியாவைப் பிடித்துக்கொண்டது. அப்பொழுதே இதாலியர்கள் அல்பேனியாவோடு நில்லாமல், கிரீஸைச்சேர்ந்த கார்பியுவையும், கிரீஸ் மேற்குக்கரையில் ஒரு பாகத்தையும் இதாலி பிடித்துக்கொள்ளுமென்று கிரேக்கர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஆல்பேனியாவுக்கும், கிரீஸுக்கும் பொதுவான எல்லைக்கு இதாலியர்கள் வருவதற்குள்ளாக கிரீஸை ரக்ஷிக்க பிரிடன் வாக்குக் கொடுத்துவிட்டது. அந்தச் சமயத்தில் முஸோலினி பிரிடனோடு சண்டையை இழுத்துக்கொள்ளத் தயாராயில்லை. ஆகவே கிரீஸுக்குள் அப்பொழுது பிரவேசிக்கவில்லை.

ஆனால் ஆல்பேனியாவைப் பிடித்தபிறகு கிரீஸுக்குள்வராது இதாலி நிற்காது என்பது எதிர்பார்க்கப்பட்டது. தகுந்த சமயத்துக்காக இதாலி காத்துக் கொண்டிருந்தது. சில சில சமயங்களில் கிரீஸை வம்புச்சண்டைக்கு இழுத்தது.

முஸோலினிக்கேற்படக்கூடிய சந்தேகங்கள்.

சமீபத்தில் ஹங்கேரியும், பல்கேரியாவும் ருமேனியாவைப் பங்கிட்டுக் கொண்டன. ரஷியா, பெஸரேபியாவையும், புகோவினாவையும் பிடுங்கிக்கொண்டது. நாஸிகளும் சென்ற மாதத்தில் ருமேனியாவுக்குள் பிரவேசித்தார்கள். இதுவே தனக்கும் நல்ல சமயமென்று இதாலி கிரீஸுக்குள் நுழைந்துவிட்டது.

ஐரோப்பாவானது ஹிட்லருக்கு சாச்வதமாய்க் கிடைப்பது சந்தேகம். கிடைத்தால், முஸோலினிக்கு அதில் ஒரு பாகத்தைக் கொடுப்பது அதிலும் சந்தேகம். ஆகையால் இப்பொழுது அகப்பட்டதைச்சுருட்ட இதாலி கிரீஸோடு சண்டைக்குப் போயிருக்கலாம்.

இந்த முடிவுக்கு வர வேறு சில ஹேஷ்யங்களுமிருக்கின்றன. சமீபத்தில் பிடேனைச் சந்தித்துவிட்டு ஹிட்லர், ப்ளாரென்ஸில் முஸோலினியைப் பார்த்துப் பேசினார். அப்பொழுது திருடர்களுக்குள் கலகம் வந்துவிட்டதுபோல் தோன்றிற்று. விஷி அரசாங்கத்தோடு வெகு ஜாக்கிரதையாய் ஹிட்லர் பேச்சு வார்த்தைகள் நடத்தக் காரணமென்ன?

பிரான்ஸைச் சேர்ந்த மத்தியதரைக்கடல்கரைப் பாகங்களையடைய முஸோலினி ஆசைப்படுவது தெரிந்தது தான். பிரான்ஸோடு ஹிட்லர் ஸமாதானம் செய்வதிலிருந்து முஸோலினிக்குப் பிரெஞ்சு பிரதேசங்கள் கிடைக்காதென்று தோன்றி, கிரீஸையாவது கொள்ளையடித்து மத்தியதரைக்கடலைத் தனதாக்கிக் கொள்ள கிரீஸோடு சண்டைக்குப் போயிருக்கவேண்டும்.

கிரேக்க ராணுவ நிலயங்கள்.

மத்தியதரைக் கடலில் முஸோலினிக்கு ஆதிக்கமிருந்தால் எகிப்தைத் தாக்குவது சுலபமாகயிருக்கும். ஆனால் ஆதிக்கமில்லையென்பது சமீபத்தில் பிரிடிஷ் இதாலியக் கடற் சண்டைகளிலிருந்து வெளியாகி விட்டது. கிரீஸையும், கிரேக்கியத் தீவுகளையும் பிடித்துக்கொண்டால் யுத்தம் செய்வதற்குச் சௌகரியமுண்டுதான்; அப்பொழுது மத்தியதரைக் கடலின் வட-கீழ் பாகத்தில் ராணுவ நிலயங்கள் வரிசையாக இதாலிக்கேற்பட்டு விடும்.

துருக்கிக் கரைக்கப்பாலுள்ள டாடிகானீஸ் தீவுகளை ஏற்கனவே பிடித்துக் கொண்டு முஸோலினி அவைகளைப் பலப்படுத்தியிருக்கிறார். ஆனால் இவைகளுடைய போக்குவரத்தை பிரிடன் தடுத்து விட்டதால் இவைகளால் முஸோலினிக்குக் கஷ்டமே ஒழிய லாபமொன்றுமில்லை. ஏட்ரியாடிக் கடலிலும், இஜியன் கடலிலும் நிலயங்கள் வரிசையாக யேற்பட்டு பந்தோபஸ்து ஏற்பட்டு விட்டால் முஸோலினிக்கு பலம்தான். ஆனால் இதற்கு இடையூருகப் பிரிடன் மத்தியிலிருக்கும் கிரீடைப் பிடித்து விட்டது.

கார்பியூவைப் பிடித்துக்கொள்ள முயற்சி செய்ததிலிருந்து.

1923-ல் கார்பியூத் தீவை இதாலி பிடித்துக்கொண்டது ஆனால் அதைப் பிறகு திருப்பிக்கொடுத்து விட்டாலும் அது முதற்கொண்டு இரண்டு தேசங்களுக்கும் விரோதமேற்பட்டு விட்டது. 18 மாதங்களுக்குமுன் ஆல்பேனியாவைப் பிடித்ததிலிருந்து இந்த விரோதம் பலப்பட்டு விட்டது.

1939 கோடை மாதங்களில் அல்பேனியா எல்லைப்புறத்தில் இதாலியத் துருப்புகளும், கிரேக்கத்துருப்புகளும் நெருங்கிவிட்டன. இதாலி, தன் துருப்புகளில பாதி பாகத்தை அகற்றிவிட்டு கிரீஸோடு போர் செய்வதில்லையென்று வாய்வார்த்தையாய் உறுதிமொழி கொடுத்ததிலிருந்து சண்டை சற்று நின்றது.

பிறகு இதாலி கிரீஸோடு ஸமாதான உடன்படிக்கை செய்துகொள்ளத் தயாராய் இருப்பதாக ஒரு வதந்தியையும் கிளப்பிவிட்டது. ஆனால் ஏற்கனவே பிரிடன் ரக்ஷிப்பதாக வாக்குக்கொடுத்துவிட்டபடியாலும், கடன் கொடுத்து வேண்டிய திரவ்ய சகாயத்தைச் செய்யத்தயாராயிருந்தாலும் கிரீஸ் பிரதம மந்திரி இதாலியோடு சமாதானம் செய்துகொள்ள மறுத்துவிட்டார்.

1935-ல் கிரீஸில் உள்நாட்டுக்கலகம் ஒன்று ஏற்பட்டது. அதன் பயனாக பொதுக்குடி அரசு இயக்கமும் அங்கு பலமாயிருந்தது. அப்பொழுது மெடாக்ஸாஸ் அதிகாரத்துக்கு வந்து நாஸிகளைக்கண்டு மகிழ்ந்தார். ஆகஸ்ட் 1936-ல் மெடாக்ஸாஸ் சர்வாதிகாரியானார் அதிலிருந்து மூன்று வருஷங்களுக்குப் பின் கிரேக்கர்கள், சர்வாதிகாரிகள் கக்ஷியைவிட்டு விலகி ஜனநாயக ஆக்ஷி நாடுகளோடு சேர்ந்துகொண்டார்கள். ஏற்கனவே, ஜெர்மனியிடமிருந்து ஏராளமாய்க் கடன் வாங்கி வியாபாரம் செய்து பொருள் ஆதார விஷயங்களில் ஜெர்மனிக்கு கிரீஸ் கட்டுப்பட்டு நின்றது. ஜெர்மனியால் தனக்கு க்ஷேமம் ஏற்படாதென்றும் தெரிந்து கொண்டது.

இந்த இக்கட்டிலிருந்து தப்ப பிரிடன் ரக்ஷிப்பதாக அந்த சமயத்தில் வாக்குக்கொடுத்தது கடவுள் கிருபைதான். ஆல்பேனியா வம்புகள் ஒரு விதமாய் நின்றவுடன், கிரீஸ் அரசரும், சர்வாதிகாரியும் எதிர்காலத்துக்கு வேண்டிய திட்டங்களை வெகு ஜரூராய்ப் போட்டு நடத்த ஆரம்பித்தார்கள்.

மாஸிடோனியா, திரேஸ் பிரதேசங்களுக்கு அரசர் நேரே சென்று பிரஜைகளின் ராஜவிசுவாசத்தைக்கிளப்பி விட்டார். பரஸ்பர பாதுகாப்புக் காரியங்களைப்பற்றி யோஜனைகள் செய்ய எல்லைக்கு வெளியேயுள்ள கீழ் திரேஸில்

திருக்கி சேனாதிபதியைக் கண்டுபேசினார். போரியா பிராந்தியத்துக்கு மெடாக்ஸாஸ் விஜயம் செய்து, திராக்ஷை சாகுபடி செய்யும் குடியானவர்களுக்கு நில பாத்தியங்களை ஊர்ஜிதப்படுத்தி, குடிகளின் ஆதரவை பலப்படுத்திக்கொண்டார்.

பிரிடன் கடன் கொடுத்த விவரம்.

பிரிடன் வாக்குக்கொடுத்ததை நிறைவேற்ற ஸர்-பிரடெரிக்-லீத்-ராஸ் கிரீஸுக்கு வந்தபோது, கிரீஸ் கவர்ன்மெண்டுக்குப் பொதுஜன ஆதரவு பலமாயிருப்பது தெரிந்தது. கிரீஸ் ஏற்றுமதிசெய்யும் சரக்குகளில்பாதி பண்டம் மாறி, ஜெர்மனிக்குள் போவதாயும், இதாலியோடும் அதிக வியாபாரநடவடிக்கைகளிருப்பதாயும் தெரிந்தது. ஜெர்மன் சரக்குகளுக்குப் பதிலாகப் பண்டம் மாறி கிரேக்கிய சரக்குகளை விற்றதால் ரொக்கப்பண செலாவணி கிரீஸில் இல்லை. இம்மாதிரியான வியாபார முறையில் கிரீஸ் ஜெர்மனிக்குப் பொருளாதார விஷயங்களில் அடிமையாய்விடும்போலுமிருந்தது. அப்படியானால் பிரிட்டன் ரக்ஷணை பிரயோஜன மற்றதாகும்.

ஆகையால் முதலாவதாக பிரிட்டன் கிரீஸுக்கு 2,000,000 பவுன் கடன் கொடுத்தது. அதை வைத்துக்கொண்டு கிரீஸ் யுத்த தளவாடங்களை வாங்கிக்கொண்டது. பிறகு, 10,000,000 பவுன் வரையில் கடன்கொடுத்து கிரேக்கிய விளைபொருள்களை வேறு இடங்களில் விற்க பிரிட்டனும் பிரான்ஸும் ஏற்பாடு செய்தன.

இதிலிருந்து ஜெர்மன் செல்வாக்குக் குறைந்துவிட்டது. முஸோலினி, யுத்தத்தில் இறங்கியபோது தானாகவே கிரீஸைப்பிடித்துக்கொள்ளும் உத்தேசம் தனக்கில்லையென்று சொல்லிக்கொண்டார்.

ஆனால் இந்த சத்தியமெல்லாம் பொய்யாயிற்று. இவர் இப்படிச்சொன்ன சில வாரங்களுக்குள், கிரீஸில் வசிக்கும் சில ஆல்பேனியர்களை, கிரேக்கர்கள் வருத்துவதாயும், டாவுட் ஹோகியா என்ற தேசாபிமானியை, கிரேக்கர்கள் கொலை செய்து விட்டதாயும் இத்தாலிய பத்திரிகைகள் புகார் செய்யத் தலைப்பட்டன.

இதெல்லாம் நகைப்புக் கிடமாச்சு. ஏனென்றால் இந்தச் சமயத்தில் ஆல்பேனியாவில் கலகமேற்பட்டு, இதாலியர்களே அடக்கும்படி நேரிட்டது. தேசாபிமானிகளென்று சொல்லிக்கொள்பவர்களைக்கண்டால் ஆல்பேனியருக்குப் பிடிக்காது. இதெல்லாம் நடந்த பிறகு, கார்புயூவும், அதற்கு அருகாமையில் உள்ள கடற்கரையும் வேண்டுமென்று ஆகஸ்டில் மறுபடியும் இதாலி கேட்க ஆரம்பித்துவிட்டது.

அரட்டல்.

மெடாக்ஸாஸ் இந்த அரட்டலுக்குப் பயந்து இடங் கொடுக்கவில்லை. வேண்டுமானால் சண்டை செய்யட்டுமென்று சும்மா இருந்துவிட்டார். அந்தச் சமயத்தில் ருமேனியாவைப்பிடிக்க ஜெர்மனி தந்திரங்கள் செய்து கொண்டிருந்தபடியால் கிரீஸோடு அப்பொழுது சண்டையைக் கிளப்பிக்கொள்ள வேண்டாம் என்று, ஹிட்லர் கேட்டுக்கொள்ள இதாலி சற்றுச் சும்மாயிருந்தது. ருமேனியா

கைவசப்படும் வரையில், இதாலியப் பத்திரிகைகளாவது, ரேடியோவாவது கிரீஸைப்பற்றி ஒரு புகார்கூடச் செய்யவில்லே. ருமேனியா சிக்கியவுடன் மறுபடியும் இதாலி கிரீஸை இடங்கள் வேண்டுமென்று கேட்க ஆரம்பித்துவிட்டது. பிரிடனோடு சேர்ந்துகொண்டு கிரீஸ் அல்பேனியாவை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு கிரீக் சாம்ராஜ்யமொன்றை ஏற்படுத்தப்போவதாகவும் சொல்லிற்று. என்ன கற்பனை ! இதைத் தடுப்பதற்காக கிரீஸ் இதாலிக்கு சில ராணுவ நிலயங்களைக் கொடுக்க வேண்டுமென்றது. கிரீஸ் இதை மறுக்க இதாலியத்துருப்புகள் படையெடுத்தன.

ராணுவ நிலயங்களுக்காக ஆரம்பித்திருக்கும் இந்தச் சண்டையிலிருந்து இதாலிக்குக் கஷ்டங்கள் ஏற்படப்போகின்றன. சண்டைக்கு வேண்டிய அநேக தாதுப்பொருள்கள் இதாலிக்குக் கிடையாது. ஜெர்மனியாலும் கொடுக்க முடியாது. இவைகளில் குரோமியம், நிக்கல், இரும்புத்தாது, தாமிரம், மாக்னிஸைட் முதலியவைகள் கிரீஸில் அகப்படும். இன்னும் இவைகளிருக்கும் சுரங்கங்கள் சரியாகத் தயாரிக்கப்படவில்லே.

இந்தச் சரக்குகளில் ஒன்ருகிய மாக்னிஸைட், யுத்தமாரம்பித்ததிலிருந்து பிரிடன் வாங்கிக்கொள்ளுகிறது. பால்கனில் அகப்படும் சரக்குகளை ஜெர்மனி வாங்கிக்கொள்ளும். இதாலிக்கு ஒன்றும் கிடைக்காது.

1939-ம் வருஷத்துக்கு முன்போல கிரீஸோடு வியாபாரத்தை நடத்த ஜெர்மானியர் விசேஷ முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிருர்கள்.

சில ராணுவ நிலயங்களுக்காக ஆசைப்பட்டு, கடலில் தன்னைப் பலப்படுத்திக்கொள்ள முஸோலினி இந்தச் சண்டையில் இறங்கியிருக்கிருர். ஆனல் இதிலிருந்து அச்சுக்கக்ஷியாருக்கு யுத்தமானது மத்தியதரைக் கடற் கரை முழுவதும் பரவி விட்டது.

இதுவரையில் கிரீஸ் நடுநிலே வகித்ததால் பிரிடனுக்கு பால்கனில் புகுந்து அச்சுக் கக்ஷியின் சூழ்ச்சியைத் தடுக்க முடியாதிருந்தது. கருங் கடலில் தன் செல்வாக்கைப் பலப்படுத்திக் கொள்ளும் வரையில் ஹிட்லர் இந்தக் கிரீஸ் சண்டையை நிறுத்தி கிரீஸ் மறைவில் சூழ்ச்சி செய்யப் பார்த்தார்.

ஆனல் இனி பிரிடனுக்கும் அச்சு நாடுகளுக்கும் கிரீஸில் நேர்முகச் சண்டை நிற்கப்போவதில்லே. கிரீஸோ மலேப்பிரதேசம். இங்கு ஜெர்மன் டாங்கிகள் உபயோகப்படமாட்டா.

அனுபந்தம் II.

பலத்த அடிகளை லண்டன் எவ்வாறு தாங்குகிறது ?
ஸ்பெயின், மேலஆப்பிரிக்காவில் நடந்த சம்பவங்கள்.
விஷி ஆஸாமிகளின் (பிரெஞ்சு ஸர்க்கார்) பிரமை.
மஹாகவி தாகூர் அவர்களுடைய அபிப்பிராயப்படி பிரிடனுடைய கடமை.

விக்ஹாம் ஸ்டீட் எழுதுகிறார்.

செப்டம்பர்மீ 23உயன்று அரசன் சொன்னார்கள். "தாத்காலிகமாக, சத்துருவின் துராக்ரஹத்தின் வேகத்தை லண்டன் நகர் வகித்துக்கொண்டிருக்கிறது." அது முதல் ஒவ்வொரு இரவும் லண்டன் பட்டணத்தான் யுத்தத்தின் முன்னணியில் இருந்து வருகிறான். நாம் அதற்கு பழகிவிட்டோம் என்று உண்மையாகச் சொல்லமுடியாவிடினும் பகைவன் பலமாக அடிக்க அடிக்க லண்டன் பட்டணத்தானின் மனோநிலை வெகு ஆச்சரியகரமாகயிருக்கிறது.

இது விஷயத்தில் பாலரும் விருத்தரும் ஒன்றாக இருக்கிறார்கள். ஒரு முதன்மையான பத்திரிக்கைக்கு 62 வயதுள்ள ஒருவர் எழுதுகிறார்:—

"அறுபதிலும் எழுபதிலும் உள்ள எங்களுக்குள்ள அதிர்ஷ்டம்தான் என்ன. நாம் இந்த யுத்தத்தில் இறங்குவோம் என்று நான் நினைக்கவேயில்லை. எங்கள் கிழண்டுபோன கால்களை வைத்துக்கொண்டு நாங்கள் போர் முனைக்கு நடக்கமுடியாது. ஆகையால் இங்கு நாங்கள் வெயிலில் உட்கார்ந்து கொண்டு இருப்போம். ஆனால் இப்பொழுது யுத்தம் எங்கள் அருகே வந்திருக்கிறது. காலைப் பாலுடன் எங்களுக்கு வழங்கப்படுகிறது. வழக்கமாக காலைப்பத்திரிகைக்கு முன் வழங்கப்படுகிறது. மேலும் உள்நாட்டு ரக்ஷகர்களாகவும், விமானப்படையெடுப்பு எச்சரிக்கைகாரர்களாகவும் முன்னணியிலிருக்கிறோம்.

யுத்தத்திற்குப்பிறகு இன்னும் அழகிய லண்டன்.

லண்டன் ஜாஸ்தி இடிபடுகிறது. ஒவ்வொரு கனத்தவெடி வெடிக்கும் போதும், காற்றில் கப்பல் அசைவது போல வீடுகள், நேர்முகமாக அடிபடாதிருந்தால், ஆடுகின்றன. விமான எதிர்ப்பு பீரங்கிகள் ஒரு வரிசை குண்டுகள் விடுத்தவுடன் ஜன்னல்கள் வழியாக வரும் காற்றானது கட்டடங்களை அதிரச்செய்கிறது.

• ஆயினும், அன்று லண்டன் நகரசபைத்தலைவர், "லண்டன் எவ்வளவு இடிபட்டாலும் அக்கரையில்லை. யுத்தத்திற்குப்பின் இன்னும் அழகும் சௌக்கியமும் கூடிய லண்டனை நிர்மாணம் செய்வோம்" என்று சொன்னபோது நம் மனதிலிருந்த எண்ணத்தை அவர் வெளியிட்டார். ஹிட்லர் அவனால் முடிந்ததைச் செய்யலாம். நம்மை அவன் கீழேகொண்டு

வரமுடியாது. எதன் மத்தியில, நாம் அவனை இன்னும் பலமாக அடிக்கிறோம்.

நான் லண்டனிலிருந்து ஒலிபரப்புவதுபோல் பெர்லினிலிருந்து ஒரு ஜெர்மன் ஒலிபரப்ப முடியுமானால், அவன் சொல்வதற்கு ஒரு பெரிய கதையிருக்கும். பரிசல்களிலும், கப்பல்களிலுமுள்ளவர்களும் அப்படியே. கலே நகருக்கருகேயிருக்கும் பெரிய பீரங்கி ஆள்கள் எவ்வாறு படையெடுப்புத் தயாரிப்புகள் பட்டறைத் தூள்கள்போல் தவிடு பொடியாவதையும், அல்லது வெடித்துப்போவதையும் அல்லது ஜ்வாலையும் புகையுமாகப் போவதையும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் சொல்ல வேண்டியதில்லை.

சுத்தியலடிக்குச் சுத்தியலடியை கவனித்தால் நாம் தான் வெகு பலமாக அடித்திருக்கிறோம். யார் வெகு நேரம் நிற்கமுடியுமென்று பார்ப்போம். ஆகையால் உள்நாட்டுப் போர்முனையும் சீராகவும் செம்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் லக்ஷம் பத்து லக்ஷக்கணக்காய் நம் துறைமுகங்களுக்குள் ஆகாரங்களும், சரக்குகளும் பிரவாஹித்துக்கொண்டிருக்கின்றன.

அரசர் அவர்கள் சொன்னதுபோல் நாம் வெகு கஷ்டமான காலத்தில் இருக்கிறோம் என்பதும் இன்னும் கஷ்டமாகயிருக்கும் என்றும் நமக்குத் தெரியும். எவ்வாறு உபாயங்கள் வீணாகப்போகலாமென்று இவ்வார சம்பவம் நினைவூட்டுகின்றன. நாம் பிரிட்டன் யுத்தத்தை நடத்திக்கொண்டு வெற்றி பெற்றுகொண்டிருக்கையில், மற்ற இடங்களில் நாம் நினைத்தபடி நடக்கவில்லையென்று காண்கிறோம்.

டாகர் பிற்போக்கு.

பிரஞ்சு பிரிடிவ்ஷ் சேர்ந்து டாகர் துறைமுகத்தில் செய்த படையெடுப்பை உதாரணமாகச் சொல்லலாம். சேனாதிபதி துகால் என்பவரும் அவருடைய மந்திரிகளும் டாகர் துறைமுகத்துக்குச் சென்றால் தங்கள் தேசத்தார் வரவேற்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள். மார்ஷல் பாக் என்ற பிரக்யாதிபெற்ற சேனாபதியின் பேரனையும் ஒரு சிறிய கூட்டத்தையும் நிராயுதபாணிகளாக வெள்ளை கொடியுடன் துறைமுகத்திற்குள்ளனுப்பினால் இந்த சுதந்திர பிரஞ்சுக்காரர்களின் சுத்தமான தேசபக்தி டாகர் அதிகாரிகளுக்குத் தெரியும் என்று நினைத்தார்கள்.

ஒருக்கால் அவர்களுக்கு விஷி ஆஸாமிகளின் வெட்கமின்மையின் அளவு தெரியாதுபோலும், அல்லது ஹிட்லரின் முன் அவர்கள் தரையில் விழுந்து சேவிக்கும் பக்தியை அறியார்கள் போலும்.

நமக்கு எல்லா நடப்புகளும் தெரியாதாகையால் நம் முடிவான அபிப்பிராயத்தை நிறுத்திவைப்போம். சேனாபதி துகால் கேட்டுக்கொண்டவுடன் நாம் சண்டையிடுவதை நிறுத்திவிட்டதாக நமக்குத் தெரியவருகிறது. ஏதோ அனுகூலமான பிரயத்தனமாகத் தோன்றினதும் இப்பொழுது தடைப்பட்டது வருந்தத் தக்கதே. அதன் பலன்கள் தெற்கு அட்லாண்டிக் சமுத்திரத்தின் இருபக்கங்களிலும் உணரக்கூடியவை.

ஸ்பெயினில் ஸம்பவங்கள்.

ஸ்பெயின் விஷயமாயும் நடந்து கொண்டிருக்கும் ஸம்பவங்கள் மன

திற்கு உத்ஸாகத்தைக் கொடுக்கக் கூடியவையாகயில்லே. அந்த விஷயத்தைக் கவனித்தால் முஸோலினியும், ஹிட்லரும் ஸ்பானிய கலகத்தில் சேனுபதி பிராங்கோவின் சார்பாகயிருந்ததுமுதல் நமக்கு அறுவறுப்பாக இருந்திருக்கிறது. பிரெஞ்சு பிரிடிஷாருடைய தலேயிடாக்கொள்கை எதை நினைத்து அனுஷ்டிக்கப்பட்டது என்று உண்மையில் நாம் அறிந்து கொள்ளமுடியவில்லே. ஏனெனில் முஸோலினியும், ஹிட்லரும் பிராங்கோவை ஸ்பெயினுடைய தலேவனுகச் செய்துவிட்டாலும், அவரை அந்த ராஜ்யத்தில் தலேமை வகிக்க அனுமதிப்பது வெகு அஸம்பாவிதம் என்று நமக்குத் தோன்றுகிறது.

பிராங்கோவின் பந்துவான ஸுனியர் என்பவர் உள்நாட்டு மந்திரியாகயிருப்பவர், ஸ்பானிஷ் ஸ்வேச்சாதிகாரக்கக்ஷியைச் சேர்ந்தவர். பெர்லினுக்குப்போய் ஹிட்லருடன் உறவாடிக் கொண்டிருக்கிருர் என்றும், ஜெர்மனியுடனும் இதாலியுடனும், ஸ்பெயினும் யுத்தத்தில் சேரவேணுமென்று ஹிட்லர் வற்புறுத்துகிருன் என்றும் ஜெர்மனி கள்ளப் போலீஸார் மாட்ரீட், பார்ஸிலோனு முதலிய ஸ்பானிய நகரங்களில் நிறைந்திருக்கிருர்கள் என்றும், அங்கு அவர்கள் வெகு சௌக்கியமாகயிருக்கிருர்கள் என்றும், நாம் கேள்விப்படும்போது, சென்ற காலத்தையும் வருங்காலத்தையும்பற்றி விந்தையுற வேண்டியிருக்கிறது.

லத்தீன் சேர்க்கையென்ற பிரமை.

விஷி ஆஸாமிகளால் போற்றப்படும் மூடத்தனமான கொள்கைகளில் சில எனக்கு நன்ருய்த் தெரியும். சென்ற வேனிற்காலத்தில் திரு. பால்ரெனேவினுடைய மந்திரி சபையில் சேருவதற்கு முன்னர் மார்ஷல் பெதேன் என்பவர் பிரெஞ்சு ஸ்தானீகராக சேனுபதி பிராங்கோவிடம் இருந்தார் என்பதை மறக்கக்கூடாது. இதாலியும், ஸ்பெயினும், பிரான்ஸும் சேர்ந்து லதீன் பாஷையுள்ள ஒரு சேர்க்கையாகயிருக்கவேண்டுமென்றும், அதனுல் ஹிட்லரையும் ஜெர்மன் சேனேயையும் தடுக்கலாமென்றும் மார்ஷல் பெதேனிடம் ஆசை வார்த்தைகள் கூறப்பட்டன.

ஹிட்லரிடமும், முஸோலினியிடமும் மார்ஷல் பெதேன் விட்டுக்கொடுத்ததற்கு இந்த எண்ணம் காரணமாக இருக்கலாம். அப்படி நினேப்பவர்கள் இந்த ரோம்—பெர்லின் அச்சில் இதாலி தேசம் ஒரு வால் என்றும், வால் தலேயை ஆட்டாது என்றும் மறந்துவிட்டார்கள் போலும்.

முஸோலினி இதுவரை கூட்டுகுற்றவாளியாயிருந்தவன் இப்பொழுது ஹிட்லருடைய தாஸனுக இருக்கிருன். "ஆப்பிரிக்கா மூலமாக அப்பாலிருக்கும் சமுத்திரங்களுக்குச் செல்ல இதாலி ஒரு பாலத்தலேப்பாகயிருக்கிறதென்று ஒரு சமயம் சேனுபதி கோயரிங் பெருமையாய்ச் சொல்லிக்கொண்டான். பேய்க்கு வாழ்க்கைப்பட்டால், இவன் பாதிப்பேயாகினும் புளியமரத்தில் ஏறத்தான் வேண்டும்.

ஜயிக்கப்பட்ட தேசத்தை நடத்தும் விதம்.

ஜயிக்கப்பட்ட அல்லது பணிந்து நடக்கும் தேசங்களுக்குரிய முறை எவ்விதமென்று ஹிட்லர் "மைன் காம்ப்" என்ற புத்தகத்தில் முன்னறி

விப்பு செய்திருக்கும், விஷயம் பொருந்திய கட்டத்தை முஸோலினியாவது, மார்ஷல் பெதேனாவது சேனாபதி பிராங்கோவாவது எப்பொழுதாவது வாசித்தார்களோ தெரியவில்லை.

அப்புத்தகத்திலுள்ளபடி "ஜயித்தவன் சூடிகையாகயிருந்தால், ஜயிக்கப்பட்டவர்களிடமிருந்து ஸ்வல்பம் ஸ்வல்பமாக வேண்டியவையை கேட்பான். தன் இயற்கையிழந்த தேசத்திடத்தில்—அதாவது தானாகப் பணிந்த ஒவ்வொன்றும் என்று பொருள்—அவன் எவ்வளவு கொடுந்துன்பமிழைத்தாலும் அத்துன்பத்தை மறுபடி ஆயுதம் திரட்டி சண்டை போடுவதற்கு தகுதியான முகாந்திரமாக ஒரு போதும் கொள்ளாது. அதற்குப் பதிலாக எவ்வளவுக்கு எவ்வளவு போடப்பட்ட நிபந்தனைகளை மனம் ஒப்பி பொறுத்துக்கொள்ளுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு எதிர்ப்பது நியாயமில்லையென்றும், வெளிக்குப் பார்த்தால் தனிமையானதும், புதிதானதுமான கொடுமையாயினும், உண்மையில் வழக்கமாக எப்பொழுதும் நமக்கு ஏற்பட்டது இதுதான் என்றும் இருந்துவிடும்."

பிரான்ஸு எதிர்க்க முடியாது.

விஷி ஸர்க்கார் ஆதீனத்திலுள்ள பிரான்ஸு இனி எவ்விதத்திலும் படை திரட்ட முடியாது. அவள் நிர்க்கதியாக இருக்கிறாள். விஷி ஆஸாமிகளின் கழுத்தைச்சுற்றியுள்ள சுருக்கை நெருக்கி ஹிட்லர் தனக்கு வேண்டியதை படிப்படியாக பிடுங்க முடியும். ஜிப்ரால்டரையும், பிரெஞ்சு மொருகோவில் ஒரு பாகத்தை ஸ்பெயினுக்கு லஞ்சம் கொடுப்பதாக யத்தனித்தாலும், அல்லது முஸோலினியும் ஹிட்லரும் ஒப்பந்தம் செய்துகொண்டு மொருகோவின் மீதத்தைதானே எடுத்துக்கொண்டாலும் மார்ஷல் பெதேனும் அவருடைய கூட்டாளிகளும் எதிர்க்கமுடியாது.

ஆபிரிக்காவிலுள்ள டாகார், ஸெனிகால் என்ற இரண்டு பிரதேசங்களும் அவைகளின் விமான வெளிகளுடன் கூட ஹிட்லர் தனக்கு வேண்டுமென்று சொன்னாலும், அல்லது சேனாபதி டிகால் என்பவரை எதிர்ப்பதின் மூலம் தனக்கு உதவி செய்யவேணும் என்று சொன்னாலும், ஹிட்லருடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்து அவனுடைய பிரஸாதத்தை ஸம்பாதிக்க விஷி ஆஸாமிகள் முயன்றாலும் அது வீணாகும்.

அவ்வாறுதான் ஜிபூதியிலும், ஸிரியாவிலும், இண்டோ சைனாவிலும் இருந்திருக்கிறது. இப்பொழுதும் இருக்கிறது. அவைகளின் விஷயமாக கடைசி முடிவு விஷி ஆஸாமிகளிடமிருந்தால் ஹிட்லருடைய வெற்றிக்கு அதிக இடையூறிருக்க இடமில்லை. நிச்சயமாக, தனிகன் சாப்பிடும்போது விழும் துணுக்குகளை இதாலி பங்குக்கு வைத்துக்கொள்ள வேண்டியதைப்பற்றி முஸோலினி ஹிட்லருடன் சண்டையிட முடியாது.

இந்த ஸந்தியில்தான் சிக்கல் ஏற்படுகிறது. முடிவு விஷி ஆஸாமிகளை மட்டும் பொறுத்ததாகயில்லை. பிரிடனும், பிரிடிஷ் ஸாம்ராஜ்யம் அதைப் பற்றிச் சொல்லவேண்டியிருக்கும். அராபி உலகமும் அலக்ஷியமாக இல்லை. வெகு சீக்கிரத்தில் அநேகமாய் ஒரு அராபிய ஜெஹாத் (மதத்திற்காக யுத்தம்)தைமுஸோலினி எதிர்க்கவேண்டியிருக்கும்.

அராபியரின் சினம்.

அராபியரின் புண்ணிய க்ஷேத்ரங்கள் இதாலியரால் தாக்கப்பட்ட காரணத்தால் எகிப்து, பாலஸ்தீனம், இந்தியா இம்மூன்று தேசங்களிலுள்ள அராபியத் தலைவர்கள் முஸோலினியை சாபமிட்டிருக்கிறார்கள். இது ஆரம்பித்தது எகிப்தை இதாலி படையெடுக்கச் செய்த பிரயத்தனம். இதாலிய நோக்கிலிருந்து அப்படையெடுப்பு அவ்வளவு திருப்திகரமாகயில்லை.

இதாலிக்கு தோல்வி ஏற்பட்டால், அப்பெரிய ஸென்யூஸி ஜாதியாரும் அவருடைய தலைவர் ஸையது இட்ரீஸு என்பவரின் தலைமையின்கீழ் இருந்து இதாலிய சேனாபதி கிரேஸியானியுடன் தீர்த்துக்கொள்ளவேண்டிய வெகுநாளைப்பழி யிருக்கிறது. ஏனெனில் அவன்தான் ஸென்யூஸி ஜாதியாரை கொலைசெய்து அவர்களுடைய சொந்த நாடாகிய லிபியாவிலிருந்து விரட்டினவன்.

ஹிட்லரும், ஜப்பானும்.

இண்டோ சைனாவில் ஜப்பானியர் கேட்டவைகளை விஷி ஸர்க்கார் அர்ப்பணம் செய்தது, அந்த பிரதேசத்தில் ஒரு முடிவை ஏற்படுத்த வில்லை. உலகத்தையாள ஹிட்லர் செய்யும் நாஸி பிரயத்தினத்தில் சேரும்படி ஸ்பெயினை வற்புறுத்தியதுபோல் ஜப்பானையும் ஹிட்லர் சந்தேகமின்றி வற்புறுத்துகிறான்.

அவன் பிரிடனைப் படையெடுத்து வந்து, லண்டனைத் தூள்செய்து, சுதந்திரத்தின் ரக்ஷகனாக ஐக்கிய ஸமஸ்தானங்கள் மட்டும் தனியே நிற்கும் படியிருந்தால், அவன் வெற்றியடைய ஸந்தர்ப்பங்களுண்டு. அவன் படையெடுக்க முடியவில்லை. லண்டனை நொறுக்க முடியவில்லை. ஆகையால் ஐக்கிய ஸமஸ்தானங்களை அலக்ஷியம் செய்யக்கூடிய அளவாகயில்லையோ வென்று ஐயம் கொள்ள அவனுக்கு இடமிருக்கிறது.

பாலர் நிறைந்த அடைக்கலக் கப்பலைத் தோணி வெடியால் தகர்த்தது நியாயமுமில்லை புகழக்கூடியதுமல்ல வென்று அமெரிக்கா அபிப்பிராயமிருக்கிறதென்று அவன் ஊகித்திருக்கலாம். அதனால்தான் பிரிடன்-யுத்தத்தை அவன் ஜயிப்பதற்கு பதிலாக வேறெங்காவது போய் சில காரியங்களை முடித்துக்கொள்ளலாமென்று நினைக்கிறான்.

அவனுக்கு பாதகம் நினைப்பவர்களும், உள்ளத்தில் விரோதியாக இருப்பவர்களும் தான் செய்து முடித்த காரியங்கள் எவ்வளவென்று அறியச்செய்ய வேணும் என்று நினைப்பான். காலத்தோடு பந்தயம் ஓடுகிறான். காலத்தைத் தோற்கடிக்க நினைக்கிறான்.

ஹிட்லருடன் ராஜி கிடையாது.

ஸம்பாவிதங்களை மதிப்பிடுவதில் நமக்கு ஸாதகமாக நினைத்துக்கொண்டிருப்பது அவ்வளவு நலமல்ல. நான் ஹிட்லருடைய பலத்தையும் நாஸி-ஜெர்மனியுடைய பலத்தையும் குறைத்து மதித்தவனல்ல. அவர்களுக்கு ஏதாவது சில ஸாதகங்களை காண்பித்து அவர்களை விலக்கு வாங்கி விடலாமென்றாவது, மற்ற வழிகளில் ஸமாதானம் செய்து விடலாமென்றாவது நினைக்கவில்லை. சரியான ஸமயத்தில் அவர்கள் பலமாகத் தடுக்கப்படா விட்டால் அவர்கள் உலகத்துக்கு நாசத்தை இழைப்பார்கள் என்பதைப்பற்றி நான் ஸந்தேகப்பட்டதில்லை.

இன்று பிரிடனும் பிரிடிஷ் ஸாம் ராஜ்யமும் தற்காப்பிலேயே யிருந்து கொண்டு, நாம் ஹிட்லருடைய தாக்கு தல்களை எதிர்த்து விரட்டிக்கொண் டிருந்தால், நாம் யுத்தத்தை ஜயித்து விடுவோம் என்று எண்ணினல் நமக்கு இப்பொழுது இருப்பதைவிட அந்த ஸந்தர்ப்பத்தில் வெற்றிபெறும் அவ காசங்கள் குறைவென்றே மதிப்பிடு வேன்.

லண்டன் தினந்தோறும் இடிபட்டு கொண்டிருக்க, இதாலியப் படை யெடுப்பைத் தடுக்க எகிப்து முஸ்தீபு கள் செய்துகொண்டிருக்க, ஹிட்லரின் வற்புறுத்துதல்களுக் கிணங்கும்படி ஸ்பெயின் தூண்டப்படும் ஸ்திதியில் இருக்க, நம் வான்படை ஜெர்மன் ராணுவ பலத்தின் மர்ம ஸ்தானங்களை பிரதி ராத்திரியும் இடைவிடாது தாக்கிக்கொண்டு, யுத்தத்தின் சேதாரங் களைப் பொருட்படுத்தாது தாக்குதல் களை விருத்தி யாக்கிக்கொண்டே வருகிறது.

நாம் முன்னேறித் தாக்குகிறோம்.

நாம் தற்காப்பை நினைத்துக் கொண் டிருக்கவில்லை. நாம் முன்னேறித் தாக்குகிறோம். ஜெர்மனியை நாம் தாக்கி நொறுக்கிக்கொண்டிருக்கையில் ஜெர்மனி உலகத்தையாள நினைப்பது உபயோகப்படாது என்று ஜெர்மன் ஜனங்களுக்குத் தெரியும்படி செய்து ஹிட்லரின் கொட்டத்தையடக்க தயா ரித்துக் கொண்டிருக்கிறோம்.

இப்பெரிய பிரயத்தனத்தில் நமக்கு ஒரு உறுதியான லக்ஷியம் இருக்கிறது. எதிரியின்பேரில் ராணுவ வெற்றியை காட்டிலும் உயரியதான செய்கையைச் செய்வதற்காக, நியாயத்திற்கும், தர் மத்திற்கும் பலம் உதவியாயிருக்கும் படி செய்ய பிரயத்தினப்படுகிறோம். அப்படிச் செய்தால் மானிடமும் யுத் தம் என்ற நாசத்திலிருந்தும் சாபத்தி லிருந்தும் விமோசனமடைந்து நிரந் தரமான அமைதியை அனுபவிக்கும்.

ஹிட்லர் இழைத்திருக்கும் ரணகள நாசத்தில், இந்த லக்ஷியத்தை நிறை வேற்றுவதற்கு இடையூருகயிருந்தவை அடிபட்டுப்போயின. அரசுகளும், நடு நிலைகளும், தேசியமும் அவருல் மிதிக் கப் பட்டன. நாகரீகமின்மை எது வென்றும், காட்டுமிராண்டித்தனம் எது வென்றும் அவன் காட்டி விட் டான். நல்லெண்ணமும் விசுவாசமும் மேற்கொண்ட கோடிக்கணக்கான மனி தர்கள் இனி கண்மூடித்தனமாக யிருப் பதிலும், நடப்புகளை நேராகப் பார்ப் பதில் மனமின்மையிலும் நம்பிக்கை வைக்கமாட்டார்கள். பிரிடனிலும், பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்திலும் தற் பொழுதிருக்கும் நந்நிலைக்கு காரணமா யுள்ள சுதந்திரத்தை நம் ஸாம்ராஜ்யத் தின் கடைசி எல்லைகளுக்கும் அளித்து பூர்ணமான வெற்றி பெரு விட்டால், ஹிட்லர் நம்மை இருக்க விடமாட் டான்.

ரவீந்தர நாத் தாகூர் சொன்னதாவது.

அன்று இந்தியன் பெடரல் கோர்ட்டு தலைமை நீதிபதி ஸர். மாரிஸ் கொயர் என்பவர் ஆக்ஸ்போர்டு கல் லூரியின் சார்பாக "இலக்கிய நிபு ணர்" என்ற பட்டத்தை மகாகவியும் வேதாந்தியுமான ரவீந்த்ரநாத் தாகூர் அவர்களுக்கு அளித்தார். தாகூரின் குணங்களைப் புகழ்ந்து சொல்லும் போது "அவர் ஒரு பிசகு நடந்த தென்றல் பிரிடிஷ் ராஜ்யத்தையே கண்டித்துப்பேசுவார். தம் தேசத்தார்

செய்த பிழைகளையே தைர்யத்துடன் திருத்தியிருக்கிருர்."

ஸமஸ்கிருதத்தில் பதிலளிக்கையில் தாகூர் அவர்கள் சொன்னுர்கள். "மனக்கவலை மிகுந்து யோக்யதை குறைந்து வரும் இந்நாளில், தேசங்களும் கண்டங்களும் நாசமாகிக்கொண்டிருக்கும் நாளில், காட்டுத்தனமும் மிருகத்தனமான குணங்களும் அவிழ்த்து விடப்பட்டு விஞ்ஞான சாஸ்திர நூல் விசாலித்திருக்கும் நாளில், ஸர்வலோக பாந்தவ்யத்தைப் பற்றிப்பேசுவது கவிதையாகத் தானிருக்கும். ஆனல் ஹிம்ஸைக் கொள்கை அப்போதைக்கு பயத்தைத்தரும். ஆயினும் அதற்கு வரம்பு உண்டு. காலத்தின் மஹத்துவத்தில் நின்று அப்பாலே நோக்கும் நமக்கு நாகரீகம் நிரந்தரமாக வளர்ந்து கடைசியான லக்ஷியத்தை அடைய வேண்டுமென்ற சிரத்தை மறுபடியுண்டாக வேணும். நம் பக்தியை வளர்க்க வேணும். ஹிட்லருடைய காட்டுத்தனத்தையும் அவனையும் அடக்க வேணுமென்ற அவாவுடன் ஹிட்லரை எதிர்ப்பதில், பிரிடனும், ஸாம்ராஜ்யமும் காலத்துடன் கைகோர்த்து நிற்கிருர்கள்."

கதம்பம்.

1. "ஸர்வதேசங்களிலும், ஸர்வ ஜனங்களும் முன்னேறவேண்டியது என்பது பொதுஜனங்களுக்கேற்பட்ட உரிமையாகும். அதுதான் நியாயம், அதுதான் சத்தியம். இம்முன்னேற்றம் நீடித்து நடக்க வேண்டிக்கொள்ளுவோம்." (மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில்.)

2. "இங்கிலாந்தானது தன் மக்களைப் பலிகொடுக்கத் தயங்குமென்று நினைத்தது பெரிய முட்டாள்தனம்." (ஹிட்லர் சென்ற யுத்தத்துக்குப்பின்.)

3. "விமான எதிர்ப்புகள் ஏற்பட்டபிறகு முன்னைவிட இப்பொழுது பிரிடனைது அதிகக்கோபத்தோடும், ஒற்றுமையோடும் எதிர்க்கிறது." (மிஸ்டர் ஜெ. பி. பிரீஸ்டிலி.)

4. "இந்தியாவிலிருந்து பிரிடிஷ்காரர்கள் விலகின பிறகு ஒரு மாதத்துக்குள் எங்கள் யுத்தக்கப்பல்கள் மதராஸுக்குவந்து, நம்முடைய இந்தியச் சகோதரர்களின் உள்நாட்டுக் கலகங்களையடக்கி, ஜப்பானின் உதவியைக்கொண்டு, புது அரசியலை அமைக்கப் போதியகாலம் கொடுக்கப்படும்." (மிஸ்டர் எம். கரம்சந்துக்கு ஜப்பானிய நண்பர் ஒருவர் எழுதிய நிருபத்திலிருந்து—நவம்பர்மீ 11வ).

5. நாஸி தத்துவமானது ஐரோப்பிய நாகரீகத்துக்கு நேர்விரோதமானது. இந்த அநாகரீகத்தைத் தொலைக்கவே நாம் இப்பொழுது போராடுகிருேம்." (மிஸ்டர் எல். எஸ். ஏமரி—நவம்பர்மீ 13வ).

6. "ஒரு ஜெர்மன் சைன்யம் அகம்பாவத்தோடு வந்தது. அதைக்கண்ட சில வாலிப பிரிடிஷ் விமானிகள் குண்டுகளைப்போட்டுத் தடுத்து சைன்யத்தின் கர்வத்தையடக்கினர்கள். நான் அதைப்பார்த்தேன்." (மிஸ்டர் ஜோஸப் கென்னடி-பாஸ்டன், நவம்பர்மீ 8வ).

7. "இந்தியாவுக்குச் சுதந்திரம் தரவேண்டுமென்று காங்கிரஸ் பிரிடனைக் கேட்கிறது. பிரிடனே தோற்றுவிட்டால் சுதந்திரம் கொடுப்பது யார்?" (ஸர். எ. எச். கஸ்நாவி—டில்லி, நவம்பர்மீ 15வ).

8. "ஜெர்மனியை நசுக்கினால்தான் அதற்குப் புத்திவரும். அதற்கு ஒரேவழி தான்உண்டு. அதாவது, ஜெர்மனியைப்படையெடுத்துத் தலைநகரைப்பிடித்து, அந்த நகரவாசிகளுக்கு உண்மை நடப்புப் புரியும்படி செய்யவேண்டும். சென்ற யுத்தத்தில் இவ்விதம் அவர்களுக்குப் புத்தி புகட்டாததால்தான் மறுயுத்தம் ஏற்பட்டது." (ஸர். ஆர்தர் ஹோப்—கடலூர், நவம்பர்மீ 16வ).

9. "இந்த யுத்தத்தின் நோக்கங்களெல்லாம் ஆழ்ந்த நோக்கங்களாகும். இது அரைகுறை யுத்தம் அல்ல. இது சைன்யங்களையும், பொது ஜனங்களையும் பாதிக்கும் முழு யுத்தமாயிருப்பதோடு, இதன் அடிப்படையாய் நிற்கும் ஜெர்மன் நோக்கங்களும், பிரிடிஷ் நோக்கங்களும் பரஸ்பர விரோதமாய் ஒன்றுக்கு ஒன்று சமரசப்படுத்தமுடியாதவை. ஆகையால், இந்த யுத்தம் முடிவதற்குமுன் சமாதானமென்பது கிடையாது." (மிஸ்டர் எல். எஸ். ஏமரி—நவம்பர்மீ 13வ).

10. "முயூனிக் ஒப்பந்தப்படி யுத்தத்தை ஒரு வருஷ காலம் ஒதுக்கிப்போட்டதில் இருந்து, பிரிடன் வேண்டிய தளவாடங்களைத் தயாரித்துவிட்டது. இவ்விதம் பிரிடனுக்குப் பலம் அதிகப்பட்டுவிட்டதற்கு மற்றெவரைக்காட்டிலும் ஹிட்லர் வருந்துகிறார். நல்ல சமயத்தில் அதாவது, பிரிடன் தயாராயில்லாத சமயத்தில் தான் படையெடுக்கவில்லையென்று ஹிட்லர் நினைக்கிறார். முயூனிக்கில் ஒப்பந்தம் செய்துகொண்டபோதும், ஹிட்லர் முழுமனதுடன் சமாதானம் செய்துகொள்ளவில்லையென்றுதான் எனக்கும் தோன்றுகிறது." (ஸர். நெவில் ஹெண்டர்ஸன்—நவம்பர்மீ 18வ)

அனுபந்தம் III.

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

5—11—40 to 11—11—40.

ஹிட்லரும்—விமான எதிர்ப்பும்.

நவம்பர் 8-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று ஹிட்லர் பிரஸங்கம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சொன்னபடி ஹிட்லரின் பேச்சு அன்றிரவு ஒலிபரப்பப்படவில்லை. கீழ்தேசங்களுக்கு ஒலிபரப்பிய செய்திகளில் அன்று இரவு முயூனிக்கில் பிரிடிஷ் விமானங்களால் ஏற்பட்ட சேதம் வெகு சிறிதென்றும், அவைகளால் முயூனிக்கில் நடந்த கொண்டாட்டத்துக்கு இடையூறு ஒன்றுமில்லையென்றும் சொல்லப்பட்டது. கொண்டாட்ட சமயத்தில் ஹிட்லர் பேசிமுடிந்ததும் ஸதஸ்யர்கள் கரகோஷம் செய்த மாதிரியும் சற்று வர்ணிக்கப்பட்டது.

சாராய-கிட்டங்கி ஸபையில் நாஸிகள் கூடி, தங்கள் வருஷாந்தரக் கொண்டாட்டத்தைக் கொண்டாடியபோது அதற்கருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷனை பிரிடிஷ்-விமானங்கள் தகர்த்துக்கொண்டிருந்தன. அதனால் நாஸிகளுக்கேற்பட்ட கஷ்டம் என்னவென்று தெரியாது. ஆனால், அப்பொழுது ஹிட்லர் பேசும் சமயம் வந்துவிட்டது. அந்தப் பேச்சு எந்தக்காரணத்தினாலோ தடைபட்டு மறுநாள் காலையில்தான் வெளிவந்தது. ஜெர்மன் ரேடியோக்கள் முன்இரவில் நிறுத்தப்படுவதால் ஹிட்லருடைய பேச்சு அன்று இரவே வெளிவரவில்லையென்று முகாந்திரம் ஜெர்மானியர்களுக்கு டியூட்ஸி லாண்ட ஸெண்டர் அன்று மாலை 6 மணிக்குத் தெரிவித்தது. உண்மையில் ஜெர்மன் நிலயங்கள் மாலை 9-15 க்குத் தான் மூடப்படுகின்றன. ஹிட்லர் பிரஸங்கமோ மாலை 6-20 க்கு. இதாலி ரேடியோ ஹிட்லர் 6-20க்குப் பேசுவாரென்று சொல்லிற்று; ஆனால் அந்த ஒலிபரப்பு முடிவதற்குள், ஹிட்லர் பிரஸங்கத்தின் ஒலிபரப்பு ரத்தாய்விட்டதாக அறிவித்தது.

பொய்ப் பிரசாரத்தில்கூட பிரிடிஷ் முற்றுகையால் எதிரிகளுக்குக் கஷ்டமாய்விட்டது.

செய்திகளும் போய், மரியாதையும் கெட்டுவிட்டது.

ஜெர்மனியிடமிருந்து இதாலியும் பொய் சொல்லக் கற்றுவிட்டது. லிவர்பூல் என்ற சண்டைக்கப்பல் நஷ்டமானதை பிரிடன் முடிவில் ஒப்புக்கொண்டுவிட்டதென்றும்; அதிலிருந்த 52 மாலுமிகள் இறந்துவிட்டதாகச் சொல்லுவதிலிருந்து கப்பல் நஷ்டமானது ருஜுவாய்விட்டதென்றும் இதாலி ஒரு ஒலிபரப்பில் ஓங்கியடிக்கிறது.

அக்டோபர் 17ல் லிவர்பூல் யுத்தக்-கப்பல் ஆகாய-டார்பீடோவால் எதிர்க்கப்பட்டது. அதிலிருந்த 700-பேர்களில் 52 அதாவது 100-க்கு 7·2 பேர்கள்தான் சேதம். இந்தக் குறைவான சேதத்திலிருந்து, ஸ்வல்ப பழுதோடு கப்பல் பத்திரமாய்த் தப்பிவிட்டதாகத்தான் ஊகிக்கவேண்டும். மேலும், வியக்தமாக, கப்பல் பத்திரமாய் துறைமுகத்தைச் சேர்ந்ததாகவும் பிரிடிஷ் அறிக்கை வெளியாயிருக்கிறது.

பிரிடிஷ்-வியாபாரக் கப்பல்கள்.

விமானப்போரில் ஜயம்பெறுமல் போனதால் ஜெர்மானியரிப்பொழுது பிரிடிஷ் கப்பல்களை நீர்மூழ்கிகளாலும், வெடி-விமானங்களாலும் எதிர்க்கப் பார்க்கிறார்கள். ஜெர்மன் கப்பல்-படை-சேனாபதி ரீடரும், விமானப் படைத் தலைவர் கோயரிங்கும் சேதப்படுத்துவதைக் காட்டிலும் கோயபல்ஸ் பிரசாரப் புளுகு அதிகமாயிருக்கிறது. 7,162,000 டன் நிறையுள்ள பிரிடிஷ் கப்பல்களை உடைத்துவிட்டதாகவும் இந்தக் கணக்கில், கடல் வெடிகளாலும், கடற்-கரை பீரங்கிகளாலும் சுடப்பட்ட கப்பல்களையும், பழுதுபட்டு, பிறகு மூழ்கியிருக்கக்கூடிய கப்பல்களையும் சேர்க்கப்படவில்லையென்றும் சொல்லப்படுகிறது.

நார்வே யுத்தத்தில் பல கப்பல்களை உடைத்துவிட்டதாக ஜெர்மானியர்கள் சொல்லிக்கொண்டார்கள். அதே கப்பல்களை பிறகு இதாலியர்களும் தாங்கள் அமிழ்த்தியதாக சொல்லிக்கொண்டார்கள்.

பிரிடிஷ், நேய, நடுநிலைக் கப்பல்களுக்கு ஏற்பட்ட மொத்த நஷ்டம், 3,421,331 டன்கள். இது ஜெர்மானியர்கள் கொடுக்கும் கணக்கில் பாதிதான். இதே சமயத்தில் 1,541,000 எதிரிக் கப்பல்களை பிரிடன் பிடித்தோ, அமிழ்த்தியோ நஷ்டப்படுத்தி யிருக்கிறது. மற்ற எதிரிக் கப்பல்கள் துறைமுகங்களில் பதுங்கிக் கிடக்கின்றன. பிரிடன் நடு-நிலைச் கப்பல்களை சேதம் செய்வது கிடையாது. பிரிடனில் புதுக் கப்பல்கள் கட்டப்பட்டுவருகின்றன. மேலும், நார்வே, ஹாலண்டு, பெல்ஜியம், கிரீஸ் கப்பல்கள் இப்பொழுது பிரிடனுக்குக் கிடைத்திருக் கின்றன. யுத்தத்துக்குமுன் இந்த தேசங்களுக்கு 5,000,000 டன் நிறையுள்ள கப்பல்களுண்டு. இதோடு 480,354 டன் கப்பல்கள், அதாவது பிரான்ஸுக்குச் சொந்தமான கப்பல்களில் நாலில் ஒருபங்கு ஜென்ரல் டிகாலேச் சேர்ந்துவிட்டன. டச் ஈஸ்ட் இண்டீஸ் தன்னுடைய சொந்த கப்பல்கள் 49-யும், தான் பிடித்து வைத்திருக்கும் ஜெர்மன் கப்பல்கள் 16-யும், டேனிஷ் கப்பல்கள் 2-யும் பிரிடனுக்குக் கொடுத்துவிட்டது. யுனைடட் ஸ்டேட்ஸ் பிரிடனுக்காக 112 வியாபாரக் கப்பல்களைக் கட்டிக்கொண்டிருக்கிறது. கப்பல்-படையைச் சேர்ந்த 64 கப்பல்களை விற்கவும் யோசனை செய்துகொண்டிருக்கிறது. இக் காரணங் களால் யுத்தாரம்பத்திலிருந்ததைவிட பிரிடனுக்கு வியாபாரக்கப்பல்கள் இப்பொழுது அதிகம்.

நவம்பர் 9ல், துணைக்கப்பலோடு சென்ற சில பிரிடிஷ் கப்பல்கள் நஷ்ட மாயின. 37,000 டன் கொண்ட 9 கப்பல்கள் நஷ்டமானதாக ஜெர்மனி ஒலி பரப்பிற்று. ஹா—ஹா—பிரபு ஒலிபரப்பில் 86,000 டன் கொண்ட கப்பல் கூட்டம் ஒன்று அடியோடு அட்லாண்டிக்கில் மூழ்கி விட்டதாக ஒரே அடியாய்ப் புளுகிவிட்டார்.

இந்தப் பொய்களுக்கெல்லாம் ஆதாரமே கிடையாது. நடப்பின் உண்மையை மார்ஷல் ஸர் பிலிப் ஜௌபர்ட் பின்வருமாறு நவம்பர் 7-ம் தேதியன்று அறிவித் திருக்கிறார்:—

"துணைக்கப்பல் போகத் தவறிவிட்டது. ஜெர்மானியர் எதிர்த்து அமிழ்த்தியது ஒரு சிறு கப்பல்தான். அமிழ்த்திய ஜெர்மன் விமானங்களை பிரிடிஷ் விமானங்களும், கப்பல்களும் உடனே வந்து சேதப்படுத்தின."

இதற்கு முதல்நாள் செய்த ஒலிபரப்பில் தெம்ஸ்-கரையில் பிரிடிஷ் கப்பல்களை பாய்ச்சல்-வெடிகுண்டு-விமானங்களைக்கொண்டு அதிகமாகச் சேதப்படுத்தி விட்டதாக ஜெர்மனி மற்றொரு பொய்யை ஒலிபரப்பிற்று. உண்மையில் அன்று-அதாவது-நவம்பர் 8ல், அதிக நஷ்டம் ஏற்பட்டது ஜெர்மனிக்கே. அன்று 14 ஜெர்மன் பாய்ச்சல்-விமானங்களை பிரிடிஷ் விமானங்கள் நஷ்டப்படுத்திவிட்டன. மற்ற இரண்டு ஜங்கர் விமானங்களை வின்செஸ்டர் என்ற பிரிடிஷ் கப்பல் உடைத்து

விட்டது. மணல்-சுமை (Ballast) ஏற்றிய கப்பல் ஒன்றுதான் பிரிடனுக்கு நஷ்டம். மற்றொரு பிரிடிஷ் கப்பல் பழுதுபட்டு, ஆனால், பத்திரமாய்த் துறைமுகம் வந்து சேர்ந்தது.

பொய் இரண்டு, பித்தலாட்டம் ஒன்று.

நவம்பர் 10-ம் தேதி அராபி பாஷையில் செய்த ஒரு ஒலிபரப்பில் இதாலி இரண்டு பொய்களைச்சொல்லி, ஒரு உண்மையை மறைக்கப்பார்த்தது. பொய்களாவன :—ஒன்று : பக்ரீனிலுள்ள பிரிடிஷ் எண்ணெய்-டாங்கிகளை இதாலியர்கள் தகர்த்தார்கள் (2) நைஜீரியாவில் கலகம் ஏற்பட்டுவிட்டது. பக்ரீனில் யுனைடட் ஸ்டேட்ஸுக்குச் சொந்தமான எண்ணெய் டாங்குகளிருக்கின்றனவே ஒழிய பிரிடனுக்குச்சொந்தமான டாங்குகள் கிடையாது. நைஜீரியாவிலும் கலகம் கிடையாது. ரம்ஸான் பண்டிகைக் காலத்தில் இதாலியர்கள் முஸ்லிம்கள் மேல் குண்டுபோட்ட சமாசாரம் மறைக்கப்படுகிறது. இதற்காக, 'முஸ்லிம்களை பிரிடன் கொடுமையோடு நடத்துவதாக' பொய் சொல்லுகிறது.

எகிப்துக்கு வேண்டிய உணவு.

நவம்பர் 6-ம் தேதி ஒலிபரப்பில் எகிப்தில் உணவுப்பொருள்கள் குறைந்துவிட்டதாகவும், வரப்போகும் மாரிகாலத்தில் ஜனங்கள் அதிகக் கஷ்டப்படப் போகிறார்களென்றும் ஜெர்மனி சொல்லிற்று. உண்மையில் எகிப்துக்குவேண்டிய உணவு எகிப்திலேயே விளைகிறது. மேலும் ஜெர்மானியர் சொல்லுகிறபடி, இதாலி போட்டிருக்கும் முற்றுகையால் எகிப்துக்குப் போக்குவரவு தடைப்பட்டிருந்தால் விளைந்த உணவெல்லாம் நாட்டுக்குள்ளேயே தங்கியிருக்கவேண்டும். ஆகையால் பஞ்சத்துக்கிடமில்லை. எகிப்தில் பஞ்சம் வந்துவிட்டதாகச் சொல்லுவதும் பொய். போக்குவரவு தடைபட்டதாகச் சொல்லுவதும் பொய்.

அனுபந்தம் IV.

யுத்தகால சேவைக்காக, ஸெய்யிண்ட் ஜான்ஸ் சங்கமும், ரெட் கிருஸ் சங்கமும், ஒன்றுபட்டு ஒத்துழைக்கும் விவரம்.

முன்னுரை.—பொருளாதாரக் குறிப்புகள்.—யுத்தம் ஆரம்பித்து ஒரு வருஷம் முடிந்தது. யுத்தகால சேவைக்காக, ஸெயிண்ட் ஜான்ஸ் சங்கமும், ரெட் கிருஸ் சங்கமும், சேர்ந்து உழைக்க இணங்கி 'யுத்த சேவையின் கூட்டமைப்பு' ஜாயிண்ட் வார் ஆர்கனைஸேஷன், என்னும் பெயருடன் தங்களின் சொற்ப ஆதாரங்களைக் கொண்டு பிரமிக்கத்தக்க விதமான அநேக அரிய சேவைகளைச் செய்துள்ளார்.

ஆரம்பத்தில், சென்னை இராஜதானியில் நடத்தியிருக்கும் வேலைகளைக் குறிப்பிட்டு, பின்பு ஐரோப்பா தேசத்திலும், யுத்தத்தில் கலந்திருக்கும் மற்ற நாடுகளிலுமுள்ள தேசீய ரெட் கிருஸ் சங்கத்தார் உழைக்கும் விவரங்களும், அகில ராஜ்யங்களும், ஜெர்மானியரும்கூட, தம் தம் பிரதிநிதிகளைக் கொண்டு நடத்தி வரும் 'ஜெனிவா இன்டர்நேஷனல் ரெட் கிருஸ் சொஸைடி' என்னும் சங்கத்தின் வேலைகளையும், மேற்படியார், சிறைப்பட்டவர்களுக்கும், காயப்பட்டவர்களுக்கும், வியாதியஸ்தர்களுக்கும் உதவி செய்யும்படி நிகழ்த்தும் சகல ஆலோசனைகளையும் விவரிப்போம்.

சென்னையில் சேவை.—யுத்தம் ஆரம்பித்ததும், யுத்தகாலத்தில் ஒத்துழைக்க, முன் தீர்மானித்திருந்தபடியே 'ஸெயிண்ட் ஜான்ஸ் ஆம்புலென்ஸின்' தென் இந்தியத் தொகுதியாரும், 'இந்தியன் ரெட் கிருஸ்' சென்னை பிரிவாரும், ஒன்று பட்டு, பெருமை வாய்ந்த கவர்னர் ஆதரவிலும் சர்ஜன் ஜெனரலின் தலைமையிலும், தம்மை 'யுத்த சேவையின் கூட்டமைப்பு'—ஜாயிண்ட் வார் ஆர்கனைஸேஷன்—என்றழைத்து வேலைகளை ஆரம்பித்தனர். செய்யப்படவேண்டிய பணிகளை இரு சங்கத்தினரும் பகிர்ந்து கொண்டனர். ஸெயிண்ட் ஜான்ஸ் ஆம்புலன்ஸ் சங்கத்தாரின் அங்கபாலிகைகள் பகுதியாரின்—நர்ஸிங் டிவிஷன்—காரியாலயத்தை, சென்னை, எக்மோர் ரெட் கிருஸ் கட்டடங்களிலேயே, அமைத்தார்கள். வாலிபரை தட்சணப்பரிகாரம் செய்யும்படி பழக்குவதும், குடும்ப சிகிச்சை படித்துக்கொடுப்பதும், நம் நாட்டிலும், இதர தேசங்களிலும் அனுப்ப போர்க் களத்து வைத்திய சாலைகள்—ஆம்புலன்ஸ் யூனிட்ஸ்—தயாரிப்பதும் அங்கபாலிகை களைப் பழக்கி வைப்பதும், ஸெயிண்ட் ஜான்ஸ் சங்கத்தார் பொறுப்பாகவும், சென்னையில், தட்சணபரிகார விடுதிகளின்—பஸ்ட் எய்டு போஸ்ட்ஸ்—நடப்புக் கும், போர்முனைக்கு, துருப்புகளின் சவுக்கியத்திற்காக அனுப்பவேண்டிய பொருள்களைச் சேகரிக்கவும், அவைகளைப் பல இடங்களுக்கு அனுப்பவும், ஒழுங்கு செய்ய, ஓர் நிலயம்,—ஸப்ளைஸ் டிபோ—ஸ்தாபிப்பதும், சென்னை ரெட் கிருஸ் சங்கத்தினருடைய பொறுப்பாகவும் எடுத்துக்கொண்டனர்.

சென்னையில் இந்தக் கூட்டுறவு கிளைச்சங்கம், எவ்விஷயத்திலும், டில்லியில் இருக்கும் தலைச்சங்கக் கமிட்டியாருடன் கலந்து கொள்கிறது. மேற்படி தாய் கமிட்டியார் மத்திய கவர்ன்மெண்டாருடனும் சைன்னிய கவுன்சிலரோடும் ஒப்புர உழைப்பதால், எந்தெந்த இடங்களுக்கு, ஆஸ்பத்திரிக்குறிய பொருள்கள் அவசிய மென்றும், போர்புரியும் சேனைகளுக்கு ரெட் கிருஸ் சங்கத்தின் நிதிகளிலிருந்தல்லாமல், பலவிதமாய் கொடுக்கப்படும், உஷ்ணம் தரும் உடுப்புக்களை, அனுப்புவது எவ்வாறென்றும் நன்கு அறிந்துள்ளார். மேற்படி சாதனங்களுக்கு வேண்டிய கம்பளிநூல் முதலியவைகளை, லகுவான விலைகளில் வாங்கவும், ஏற்பாடு செய்கிறார்கள். முற்றுப்பெற்ற சகல சாமான்களையும் அனுப்ப சில துறைமுகப் பட்டணங்களைத் தெரிந்தெடுத்திருக்கிறார். போர்முனை ஆஸ்பத்திரிகளுக்காகச் செய்யும் சாமான்களுக்காக, அவர்கள் சென்னை மாகாணத்திற்கு முன்பணமாய் ரூ. 6,000 கட்டியிருக்கிறார்கள். இத்துடன் மதராஸ் சங்கம் ரூ. 1,000 சேர்த்துக் கொண்டது.

யுத்த சேவைக்காக செலுத்தப்படும் சகல தொகைகளையும் ஒன்ருய்த் திரட்டிச் செலவழிப்பதுவே உத்தமம் என்று கண்டு, இவ்வருஷத் துவக்கத்திலேயே—1940—இவ்வமைப்பை "பெருமை வாய்ந்த கவர்னரின் யுத்த 'நன்கொடைக் கூட்டுறவுக் கமிட்டி' என்பதுடன் பொருத்திவிட்டனர். மீண்டும், தம் வேலைகளைக் கைவிடாது, பொருள் உதவியைக்கொண்டு, கீழ்க்கண்ட மூன்று தலைப்பில் செலவுகள் செய்தனர்.

1. ரெட் கிருஸ் பிரத்தியேகமாய்ச் செய்யும் சகாயமாக, வியாதியஸ்தர், குண்டுபட்டவர்களுக்காக, ஆஸ்பத்திரியில் உபயோகிக்கப்படும் சாதனங்களுக்காக
2. இராஜாங்கக் கப்பற்படை, இராஜாங்க இந்தியக் கப்பற்படை, விமானப் படை, முதலியவைகளில் சேர்ந்த, இந்தியரும் ஆங்கிலேயருமான போர் வீரர்களுக்குச் சகாயம் அளித்தல்.
3. நன்கொடையாளரால் குறிப்பிக்கப்பட்ட பல விஷயங்களுக்காக செய்யும் செலவுகள்.

இவ்வொழுங்கு மிகவும் திருப்திகரமாய் நடைபெற்று வந்தது. ஜூலை மாதத்தில் இந்த இயக்கமும், கவர்னரின் பெருத்ததோர் இயக்கமான 'யுத்த நிதியுடன்' சேர்க்கப்பட்டது. என்ருலும் யுத்த நன்கொடைக் கூட்டுறவுக் கமிட்டியார், குறிப்பிட்டு அனுப்பப்படும் தொகைகளையும், ரெட் கிருஸுக்கென்று நேரே அனுப்பப்படும் தொகைகளையும் கொண்டு தம் வேலைகளை நடத்தியே வருகின்றனர். ஆகஸ்டுமுடிய உள்ள செலவு விவரம் பின்வருமாறு :—

		ரூ.
1.	முன் குறிப்பிட்ட சாதனங்கள் சேர்க்கும் யுத்த நிலயத்திற்காக—வார் ஸப்லைஸ் டெபோ	35,942
2.	பிளாண்டர்ஸ், வடபிரான்ஸ், இவ்விடங்களிலிருந்து ஏற்பட்ட மகாநஷ்ட நிவர்த்திக்காக பிரிடிஷ் ரெட் கிருஸ் சங்கத்திற்கனுப்பியது	1,00,000
3.	அடைக்கலம் புகுந்த அந்நியரின் பராமரிப்புக்காக பிரிடிஷ் ரெட் கிருஸ் சங்கத்திற்கனுப்பியது	60,000
4.	டி. டாக். எச். என்னும் சங்கத்தாருக்கு	2,000
5.	ஜார்ஜ் மன்னர் பேராலுள்ள கப்பலோட்டிகள் நிதிக்காக ...	1,30,000
6.	ஊர் ஊராய் போகக்கூடிய போர்க்களத்து வைத்திய சாலைகள்—10-ன் விலை	34,586
7.	இந்தியக் கப்பற் படையாளர்க்கு	2,000
	மொத்தம் ரூ. ...	3,64,528

ஆகாயப்படை எதிர்ப்பினல், லண்டனில் ஏற்பட்ட கஷ்டநிவர்த்திக்காக லண்டன் நகரத்தலைவர் ஏற்படுத்திய நிதிக்காக ரூ. 50,000 ஸெப்டம்பர் மாதத்

தில் அனுப்பியிருக்கிறது. மேலும், இதே காரணத்திற்கென்று, பிரத்தியேக மாய்க் கொடுக்கப்பட்ட ரூ 13,300-க்குச் சமமான 1,000 பவுன்களும் அனுப்பப் பட்டது.

ரெட் கிரஸ் சங்கத்தாருக்கு அனுப்பப்படும் நன்கொடைகளை, வியாதியஸ்த ருக்கும், குண்டுபட்டவர்களுக்கும், அடைக்கலம் புகுந்தாருக்குமேயல்லாது, சுகதேகிகளுக்கான வீரருக்குச் செலவு செய்யப்படுவதில்லை. இதை மறந்துவிடக் கூடாது. ஆகவே, செலவுகளின் அறிக்கையானது, யுத்த நன்கொடைக் கூட்டுற வுக் கமிட்டியாருடையதாகும். ரெட் கிரஸ் சங்கத்தினரது மட்டும் அல்ல. அடுத்த அத்தியாயத்தில், மதரஸ் இராஜதானிவாசிகள் செய்யும் சேவையும், பொருள்செலவு விவரமும் பிரத்தியேகமாய்த் தெரிவிக்கப்படும்.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XX.

1940—

				மணி
நவம்பர்	23, சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
	24, ஞாயிற்றுக்கிழமை.	ராசியமங்கலம் ...	காலை	9.45
		திருவப்பூர் ...	மாலை	5.30
		புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம்.	,,	5.00
	25, திங்கட்கிழமை ...	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
		வேந்தம்பட்டி ...	மாலை	5.30
	26, செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
		வேங்கடக்குளம் ...	மாலை	5.30
		கீழாநிலை ...	,,	5.30
		ராயவரம் ...	,,	5.30
	27, புதன்கிழமை ...	திருமயம் ...	,,	5.30
	28, வியாழக்கிழமை ...	நச்சாந்துபட்டி ...	,,	5·30
		ராமச்சந்திரபுரம் ...	,,	5.30
	29, வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

பிரஸங்கம் XXI.

	30, சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
டிஸம்பர்	1, ஞாயிற்றுக்கிழமை.	வயலோகம் ...	காலை	9,45
	2, திங்கட்கிழமை ...	ஆதனக்கோட்டை ...	மாலை	5.30
	3, செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
		கீரனூர் ...	மாலை	5.30
		ஒடையாளிப்பட்டி ...	,,	5.30
		வேகுபட்டி ...	,,	5.30
	4, புதன்கிழமை ...	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		வியாபாரிகள் சங்கம் புதுக்கோட்டை, (சாந்தார்கோவில் அம்மன் சன்னதி.)	மாலை	6.30
		ஏம்பல் ...	,,	5.30
		குழிபிறை ...	,,	5.30
	5, வியாழக்கிழமை.	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00
		புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம்.	மாலை	3.30
		மிதிலைப்பட்டி	[illegible]	5.30

1940-ம் வருஷம்

டிஸம்பர்மீ 6, 7, 8 தேதிகளில்

புதுக்கோட்டை டவுனில்

ஸ்டேட் யுத்த நிதிக்காக

நடைபெறும் உற்சவத்தை

அவச்யம் வந்து பாருங்கள்.

போஷகர் :—மஹா-ள-ள-ஸ்ரீ மன்னர் அவர்கள்.

தீபங்களின் காக்ஷி

❖

விளையாட்டுகள்

❖

பாட்டுகள்

❖

மாந்தரீக வித்தை

❖

பக்கக் காக்ஷிகள்

❖

கிரிக்கட்

டிக்கெட்டுகள் சொல்ப விலைக்கு யுத்த நிதிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கமிட்டியாரிட மிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(ள-தர்பாரவர்கள் ஆதரவின் கீழ்)

…damba State Press, Pudukkottai. 4,400—23-11-40.